நாடோடிகள்

தொகுதி 4

வெளியீடு
புதிய பண்பாட்டு அமைப்பு

With Best Compliments from :

LEGANLINE FREIGHT SERVICES

Customs House Agent. Clearing & Transport Agent

Affiliated with :

ASCS
Accounting Systems & Consultancy Services

Management & Tax Consultation
Auditing & Book - Keeping
Computer Software Development
Internet & E-mail
International Marketing Information
Printing of Business Forms & Blocks

No. 117 - 1/1 A, Second cross street
Colombo -11
Mobile : 077-636960

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடோடிகள்

13 B, Parkwood Complex, Park Road, Nuwara EliyaTel: 052-34720
Branch 48/5, St.Mary's Road, Colombo -15 Tel:077-327758

உள்ளே

இரட்டைத் தலையங்கம்

— சமாதான சகஜீவனத்துக்கான பிரயத்தனம் நீடு வாழ்க.

— நம்பிக்கை தரும் பன்னாட்டு சூழ்நிலைகள் ..... (ஆசிரியர்குழு)

கவிதை

- "புதைக்கப்பட்ட விதைகள்" மை. பன்னீர்
- "மலைக்குள் பெய்த மழை" எஸ். செல்வராஜா
- "முகம் கொள்ளும் மலையகம்" விதுஷா விமலவன்
- "மல்லியப்பு சந்தி" ம.திலகர்

கட்டுரைகள்

- பேராசிரியர்.கா.சிவத்தம்பி
- தை.தனராஜ்
- என்.சரவணன்

புதிய பண்பாட்டு அமைப்பும் சரிநிகர் பத்திரிகையும் இணைந்து நடாத்திய இலக்கிய போட்டியில் பங்குபற்றியோர் விபரம்

தொடர்புகளுக்கு:

13 B, Parkwood Complex, Park Road,
Nuwara Eliya Tel: 052-34720

Branch 48/5, St.Mary's Road, Colombo -15
Tel:077-327758

அன்பளிப்பு

50/=

ஓட்டைப்படம்

"உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறைகளின் சித்தரிப்பு"

— வாசுகி ஜெய்சங்கர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பண்பாட்டு அமைப்பின்
ஐந்தாண்டு பூர்த்தி

மலையக கல்வி ஆய்வரங்கம்

மக்கள் கலாசார விழா - 2002
விருது வழங்கல் நிகழ்வுகளின்
சிறப்பிதழாக இவ்விதழ்
வெளிவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடோடிகள்
13 B, Parkwood Complex, Park Road, Nuwara EliyaTel: 052-34720
Branch 48/5, St.Mary's Road, Colombo -15 Tel:077-327758

இரட்டை தலையங்கங்கள்

சமாதான சகஜீவனத்தக்கான பிரயத்தனம் நிடு வாழ்க!

காலனியாதிக்கத்தின் பிடியில் இருந்து நீண்ட போராட்டங்களின் பின்னர் விடுதலை பெற்ற நாடுகளின் அரசுகள் தாமே மீண்டும் ஆக்கிரமிப்பு அரசுகளாகியதன் விளைவாக புதிய நாடுகளின் தேசிய சுதந்திரத்தில் மீண்டும் ஏகாதிபத்திய தலையீட்டுக்கு வழிவகுத்து வருகின்றது. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல.

2500 ஆண்டுகள் நெடிய காலப்பகுதியில் கட்டமைக்கப்பட்ட பௌத்த மேலாதிக்க சித்தாந்தப் போக்குகள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக சிங்கள பௌத்த சித்தாந்தமாக இன, மத பரிமாணமுடைய ஆக்கிரமிப்பு சித்தாந்தமாக உருவெடுத்ததன் விளைவாக தேசிய சுதந்திரத்தை சமனாக பகிர்ந்து கொண்டிருக்க வேண்டிய தமிழ் முஸ்லிம், மலையக தமிழ் மக்கள் அன்னியப்பட்டுப் போனார்கள்.

சுதந்திர நாட்டின் அடிமைவாழ்வை எதிர்த்து எழுந்த தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் இராணுவ மேலாண்மை நிலையை எட்டியது. சிங்கள ஆக்கிரமிப்பு படைகளை எதிர்த்து பன்னாட்டு இராணுவ ஆய்வாளர்களும் நிபுணர்களும் வியக்கும் வகையிலான வியூகங்கள் மேலாண்மை பெற்றன.

சிங்கள பௌத்த அரசொன்றினால் என்னதான் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சக்திகளால் போசிக்கப்பட்டாலும் விடுதலை எழுச்சியை நசுக்க முடியவில்லை. ஊலகளாவிய ஆக்கிரமிப்பாளர்களின் போர் தந்திரங்கள், உதவிகள் போரியல் சாதனங்கள் என்பனவற்றில் மட்டும் இராணுவ வெற்றிகள் அடையப்பட முடியாதென்பது ஆக்கிரமிப்பு அரசுக்கு மெல்லமெல்ல புரியத் தொடங்கியுள்ளது.

போர்த் தந்திர ரீதியான வியத்தகு ஆளமையை நிலைநாட்டிய விடுதலைப் புலிகளுக்கு அரசியல் ரீதியாக உலகளாவிய பின்னடைவு ஏற்பட்டமையும் இங்கே கவனிக்கத்தக்கது.

கடந்த முப்பதாண்டுகால உள்நாட்டு போரின் மானிட அவலம் துயரம் தோய்ந்ததாகும். தமிழீழத்தின் பொருளாதாரம் சின்னாபின்னமான அதேவேளை இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்தது. புலப்பெயர்வுகள் அகதி வாழ்வு, விதவைகள், அனாதைச் சிறுவர்கள், ஆயிரமாயிரமாய் பெருகினார்கள், தமிழரின் பொருளாதாரம், கலாசாரம் சிதைந்து போனது. இந்த மானிட அவலங்களுக்கு முடிவுகாணவும் அருகருகே வாழ்கின்ற தேசிய இனங்கள் மத்தியில் சமாதான சகஜீவனம் நிலவவும் மேற்கொள்ளப்பட்டுள்ள போர் நிறுத்த புரிந்துணர்வு நீடு வாழ வேண்டுமென விரும்புகின்றோம்.

இது ஒன்று மட்டுமே இந்த தீவின் மானிட அவலங்களுக்கு முடிவுகாணும் வழிமுறையாகும்.

இதனை குழப்பியடித்து மீண்டும் போர்களம் நோக்கி தள்ளுவதில், மனித இரத்தம் புசித்துப் பலகிப்போன பன்னாட்டு சக்திகள் ஈடுபடக்கூடும். அவற்றின் உளவு அமைப்புகள், இராஜரீக பின்புலங்கள் குறித்து விழிப்புடன் இருப்பது அனைத்து தரப்பு மக்களதும் பணியாகும்.

தமிழகத்தில் பேச்சுக்கு இடம் கொடுக்க மறுக்கிறது ஜெயலலிதா அரசு, ஜே.ஜே மருத்துவமனையை அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் தந்தையார் நியூயோர்க்கில் திறந்து வைத்துள்ளார்.

அமெரிக்க தூதுவர் ஆஸ்லி வில்ஸின் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்குமான அறிக்கையும் அதனை அரசு சார்பாக்கிக் கொண்டு குரல் தரும் அமைச்சர் ஜீ.எல்.பீரிசும், மீண்டும் போர் தொடங்கவும் கூடும். ஆயத்தமாயிருங்கள் என அமெரிக்க இராஜாங்க செயலாளரின் யாழ் வருகையின் போதே படையினரிடம் கூறும் பிரதமரும் எச்சரிக்கையுடன் நோக்கப்பட வேண்டிய நகர்வுகள் இடம்பெறுவதற்கு சான்றுபகர்கிறார்கள்.

ஆக்கிரமிப்பை எதிர்த்து வீருகொண்டெழுந்த தமிழர்கள் தம்மை திருப்தி செய்யாத எந்தத் தீர்வையும் ஏற்கமறுப்பது நியாயமானதே.

அதேவேளை அடிமை விலங்கிடப்பட்ட நிலையில் இருக்கும் மலையக தமிழர் முஸ்லிம்களின் அடிமை விலங்கை அகற்றிக் கொள்வதும் அவசியமாகும்.

அவ்வாறில்லாதபோது இலங்கை தீவு ஒரு முடிவற்ற போர்களத் தீவாய் தொடர்ந்திருக்க கூடும்.

அனைத்து தேசங்களினதும் சமாதானத்திற்கு
தேசங்களிடையேயான சக ஜீவனத்துக்குமான
பிரயத்தனத்தை பலப்படுத்துவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை தரும் பன்னாட்டுச் சூழ்நிலைகள்

உலகலாவிய ரீதியில் நம் காலத்தில் நம்பிக்கை தரும் நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன.

பூகோளமயமாக்கல் என்ற புனை பெயரில், ஏகாதிபத்திய சக்திகள் உலகை, மறு காலணித்துவப்படுத்தவும், தம்மிடையே மறுபங்கீடு செய்து கொள்ளவுமான நடவடிக்கைகளை எதிர்த்து சூழலியல் குழுக்கள், மனித உரிமை குழுக்கள், பூகோளமயமாக்கல் எதிர்ப்பாளர்கள், மூன்றாம் உலக தலைவர்களிடம் இருந்தும் கூட அலையலையான எதிர்ப்புகள் தோன்றியுள்ளன.

அமெரிக்க நகரங்களான, சியாட்டல், சிக்காக்கோ, வாசிங்டன் உட்பட, கனடா, மெக்சிக்கோ, ஜெனிவா, ஜெனோவா, கூலம் நகர், தென்னாபிரிக்கா, டோக்கியோ, ஸ்பெயின் தலைநகர் பாசிலோனாவில் ஐரோப்பிய யூனியன் உச்சிமாநாட்டை எதிர்த்தும் பல நாடுகளிலும் நகரங்களிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் மூன்றாம் உலகத் தலைவர்களும் ஏகாதிபத்தியத்தையும் அதன் துணைப் படைகளான உலக வங்கி பன்னாட்டு நாணய நிதியம், உலக வாணிபத் தாபனம் கைத்தொழில் மய நாடுகள், ஐரோப்பிய யூனியன், பொதுநலவாயம் என்பவற்றை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்பலைகளையும் எழுப்பியுள்ளன. பல மூன்றாம் உலகத் தலைவர்கள் மெல்ல மெல்ல வாய் திறக்கத் தொடங்கியுள்ளன.

ஆனால், 2001 செப்டம்பர் 11 அமெரிக்கா மீதான அதிரடித் தாக்குதல் ஏற்படுத்திய அதிர்வுகளை, அவமானத்தை பின்னடைவை வேறு எதனாலும் ஏகாதிபத்தியத்திற்கு ஏற்படுத்த முடியவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இத்தாக்குதல் கோடிக்கணக்கான மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு கிடைத்த வெற்றியாகும். அதேவேளை மானிட அவலம் நோக்கிய கண்ணோட்டத்தில் கவலைக்குரியதாகும். இதற்காக மானிடம் செலுத்திய விலை ஆப்கானிஸ்தானின் அழிவும் அவலமும் என்பதை மறந்துவிட முடியாது.

தேசிய விடுதலைப் போராட்டங்களையும் ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கங்களையும் ஒடுக்குவதற்கு ஆக்கிரமிப்பு அரசுகள் உருவாக்கிக் கொண்ட பயங்கரவாத எதிர்ப்பு என்ற பதாகையின் கீழ் உலக நாடுகளை அணிதிரட்டிய அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆப்கானிஸ்தானை கபளீகரம் செய்துள்ளது. அதேவேளை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெளியுறவு அமைச்சரை சந்திக்க மறுத்ததன் மூலம் சவுதி, ஜோர்தானிய அரசுத் தலைமைகள் தமது ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியமை வரவேற்கத்தக்கது.

அதற்கு மேலாக ஈராக், ஈரான், சூடான், எத்தியோப்பியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் மீது அணுவாயுத தாக்குதல் தொடுப்பதற்கான அமெரிக்காவின் இரகசியத் திட்டம் அம்பலமாகியுள்ளது. இதன் மூலம் மனித குலத்தின் முன் ஏகாதிபத்தியம் மீண்டுமொருதடவை வெட்கித்து நிற்கிறது.

இந்நிலையில் ஈராக், ஈரான் உட்பட எந்த நாட்டையும் தாக்க ஒத்துழைக்க மறுக்கும் ஆசிய, ஆப்பிரிக்க இலத்தீன் அமெரிக்க தலைமைகள், அரசுகள் பாராட்டுக்குரியன.

இந்திய பாராளுமன்றம் மீதான தாக்குதலையடுத்து இந்திய பாக்கிஸ்தான் எல்லையில் தோன்றிய போர்க்கால பதற்றமும் அதனை பயன்படுத்தி அமெரிக்கா கொடுத்த அழுத்தங்களை துச்சமென மதிக்கும் இந்திய அரசும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நோக்கில் பாராட்டுக்குரியது.

ஐ.நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருந்து அமெரிக்கா தூக்கி எறியப்பட்டமை, சீனாவுக்கெதிராக அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு நிராகரித்தமை, இஸ்ரேல் அருகே பாலஸ்தீன அரசு இருப்பதை உறுதி செய்யும் ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானம்.

ஆபிரிக்க, சிம்பாபே விடுதலை போராளியும், சனாதிபதியுமான றொபர்ட் முகாபேயின் நில மீட்புக் கொள்கையின் உறுதிப்பாடு, அவரை பதவி கவிழ்க்க முயன்ற ஏகாதிபத்திய நாசகார திட்டங்களையும் மீறி மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டமையும் தென்னாபிரிக்கா உட்பட ஆபிரிக்க நாடுகள் சிம்பாபேக்கு ஆதரவான பகிரங்க நிலைப்பாட்டை அனைத்துலக அரங்குகளில் வெளிப்படுத்தி வருவதும் நம்பிக்கை தரும் இன்னொரு நிகழ்வுப் போக்காகும்.

முன்னால் பிரித்தானிய காலனிகளின் நவீன கூட்டமைப்பான பொதுநலவாய அமைப்பிலிருந்து சிம்பாபேயை வெளியேற்றும் பிரித்தானியாவின் திட்டத்தை உறுதியுடன் எதிர்த்து நின்ற மூன்றாமுலகத் தலைவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இலங்கையின் சமாதான முயற்சியை நிர்மூலமாக்கும் பின்னணிகளுடன் கூடிய அமெரிக்க தூதுவர் ஆஸ்லி வில்லிஸ்சின் அறிக்கையை அரசு தரப்பை எதிர்த்து கருத்துக் கூறியமை எம்காலத்தில் நம்பிக்கை தரும் இன்னொரு சமிக்ஞையாகும்.

பயங்கரவாத எதிர்ப்பின் பெயரால் உலகின் விடுதலை இயக்கங்கள், தேசிய எழுச்சிகள், ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கங்கள் என்பனவற்றை நசுக்கிவிட எடுக்கப்படும் முயற்சிகளை எதிர்த்து தொடர்ச்சியான அனைத்துலகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பெருவின் "மின்னும் பாதைகள்" இயக்கத் தலைவர் அபிமன்யு குஸ்மான் கைதுசெய்யப்பட்டமை, குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் தலைவர் அப்துல்லா ஒகலான் கைதுசெய்யப்பட்டமை, அங்கோலா தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர் ஜோன்ஸ் சம்பவி மிலேச்சத்தனமாக படுகொலை செய்யப்பட்டமை பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமைகள் மீதான தமாக்குதல்கள், படுகொலைகள் என்பனவற்றின் மூலமும் ஆற்றல் மிக்க மூன்றாம் உலக தலைமைகளை அழிப்பதில் ஏகாதிபத்திய கூலிப்படைகள் வெற்றி பெற்றுள்ளன. இது உலகப் புரட்சி இயக்கத்திற்கு நீண்டகாலப் பின்னடைவு அல்ல.

உலக வறுமை ஒழிப்பையும், இனவெறி எதிர்ப்பையும் சூழல் மாசடைதலையும், மூன்றாம் உலகின் கடன் சுமையை நீக்கிக் கொள்வதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. இதனால் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் மனித குலத்தின் எதிரிகளாய் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

ஏகாதிபத்தியம் மனிதகுலத்தின் மிகப்பெரும் பகுதியினரால் எதிர்க்கப்பட்டும், அறுவருக்கப்பட்டும் தனிமைப்படுத்தப்பட்டும் வருகின்றது என்பதற்கு இவையே சமகால சான்றுகளாகும்.

மானிடத்தின் விடுதலை வேட்கையை படைபல வலிமையால் தகர்த்துவிட முடியாது என்பதை வரலாறு மீண்டும் மெய்ப்பிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தமிழர்களின் பண்பாட்டுத் தளம்

– பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

இலங்கைத் தமிழ் வழக்கில் இன்று மலையகம் எனும் தொடர் இலங்கையின் மலைப் பிரதேசங்களிலுள்ள பெருந்தோட்டங்களிலும் அவற்றைச் சார்ந்த நகரங்களிலும் வாழும் இந்திய வம்சாவழித் தமிழரைக் குறிப்பதாகும். மலையகப் பகுதிகளைச் சாராத பகுதிகளிலுள்ள பெருந்தோட்டங்களில், அதாவது மேல், தென் மாகாணங்களைச் சார்ந்த இறப்பர் பெருந்தோட்டங்களில் வாழ்பவர்களையும் மலைசார் பகுதிகளிலிருந்து சென்று வடகிழக்கு பகுதியின் விவசாயப் பிரதேசங்களிலும் (கிளிநொச்சி, வவுனியா, மாவட்டங்களில்) கொழும்பிலும் வாழ்பவர்களையும் கூட மலையகத் தமிழர் என்ற தொடர் கொண்டே சுட்டும் மரபு இன்று வழக்கிலுள்ளது.

மலையகம் என்பது இலங்கையின் அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் எண்ணக்கருவாக அமைந்துள்ளது. மலையகத் தமிழர் என்ற இத்தொடர், பொதுப்படையாக, பெருந்தோட்டங்களில் இந்திய வம்சாவழித் தமிழர்கள் யாவரையும் குறிப்பிடுகின்றதெனினும், சற்றுக் கூர்ந்து நோக்கும் பொழுது, அது உண்மையிற் பெருந்தோட்ட உற்பத்தி முறையோடிணைந்துள்ள மூன்று முக்கிய குழுவினரை ஒருங்கி இணைந்துள்ள ஒரு பதமென்பது தெரிய வரும்.

1. பெருந்தோட்டங்களில் வேலைபார்க்கும் தொழிலாளிகளான இந்திய வம்சாவழித் தமிழர்கள் (கங்காணிகளும் தொழிலாளர்களும்)

2. பெருந்தோட்டங்களில் நிர்வாக அலுவலகங்களில் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் இந்திய வம்சாவழித் தமிழர்கள் (இவர்களுள் ஆசிரியர்களையும் சேர்த்துக் கொள்வர்).

3. பெருந்தோட்டங்களைச் சார்ந்த நகரங்களிலும் வணிக முயற்சிகளிலீடுபட்டுள்ள இந்திய வம்சாவழித் தமிழர்கள்.

ஆகியோரே அந்த மூன்று குழுவினருமாவர். இவர்களிடையே வர்க்க, சமூக, வேறுபாடுகளிருப்பினும், பல்வேறு சமூக, பொருளாதார அசைவியக்கங்கள் காரணமாகவும் அரசியல் வரலாற்று நிர்ப்பந்தங்கள் காரணமாகவும் இவர்கள் ஒன்றாகவே நோக்கப்பட்ட வரலாற்றினூடாகவும், இவர்களிடையே வளர்ந்த தவிர்க்க முடியாத ஒன்றிணைப்பினூடாகவுமே மலையகத் தமிழர் என்ற அரசியல் சமூக, எண்ணக்கரு வளர்ந்துள்ளது என்பது வரலாற்றுண்மையாகும். மலையகம் என்பது மேற்கூறிய மூன்று கூறுகளின் இணைப்பினைப் பிரதிபலிக்கும் எண்ணக்கருவெனினும், அதன் தளமாகவும், பலமாகவும் அமைவது பெருந்தோட்டத் தொழிலாளரேயாகும். பெருந்தோட்டத் தமிழர் வாழ்க்கையின் மையப்புள்ளி தொழிலாளக் குடும்பம் தான். மலையகம் பற்றிய எந்தப் புலமை உசாவலும், அந்தத் தொழிலாளக் குடும்பங்களைப் பிரதானப்படுத்துவதாகவேயிருத்தல் வேண்டும். ஆனால் அத்தொழிலாளர்களின் வாழ்க்கைமுறைமை அதாவது அவர்களின் பண்பாட்டு நடைமுறைகள், கருத்துநிலை பற்றிய ஆய்வுகள் இல்லையென்னும் அளவுக்கு மிகக் குறைவாகவேயுள்ளது.

இலங்கை அரசினைப் பொறுத்தவரையில், இந்தப் பெருந்தோட்ட இந்தியத் தமிழ் வம்சாவழியினரின் பிரச்சினை மிக முக்கியமான ஒன்றாகும். முலையகத் தமிழர்களின் பிரச்சினை இலங்கையின் தேசிய மட்டத்தில் நான்கு பரிமாணங்களைக் கொண்டதாகும்.

1. சுத்த சிங்களப் பண்பாட்டின் மையம் என்று கருதப்படும் ஒரு பிரதேசத்தில் (கண்டியைச் சின்னமாகக் கொண்ட மலைநாட்டுச் சிங்களவர் வாழும் பிரதேசத்தில்) தமிழர்களின் ஆதிக்கச் சாத்தியம் பற்றிய பயம்.

2. இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, றப்பர், உற்பத்தியை இலங்கையில் ஏற்பட்டு வரும் அண்மைக்காலப் பொருளாதார வளர்ச்சிச் செல்நெறிகளுக்கேற்ப அமைவு செய்து கொள்ளல் பற்றிய பிரச்சினைகள்.

3. இப் பெருந்தோட்டங்களில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு, சர்வதேச மட்டத்திற்கு குறைந்தபட்சத் தேவைகளாக ஏற்றுக் கொள்ளப்படும் வசிப்பிட சுகாதார, கல்வி சேவைகளை வழங்குதல். இவ்விடயம் பற்றி ஐ.நா. ஸ்தாபன நிறுவனங்களும், சர்வதேசிய, அரச சார்பற்ற நிறுவனங்களும் உன்னிப்பான கவனஞ் செலுத்துகின்றன.

4. எல்லாவற்றுள்ளும் மிகச் சிக்கலானதான பிரச்சினை. இந்த இந்திய வம்சாவழித் தமிழரை எவ்வாறு "இலங்கையராக" இணைத்தெடுத்துக் கொள்வதென்பதாகும். பிரஜாவுரிமை பற்றிய சட்டங்கள் வழியாக இலங்கையர்கள் ஆகியுள்ளவர்களைத் தொடர்ந்தும் ஒரு தனிக்குழுவாக நடத்துவது சிரமமான ஒன்றே. பாரம்பரியமான இலங்கைத் தமிழர்களின் அரசியல், ஆட்சியமைப்பு அந்தஸ்து இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெருந்தோட்டத் தமிழ்ச் சமூகத்தினுள்ளே சமூக, பண்பாட்டு விடயங்களில் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் தமது லயன் வாழ்க்கை மரபிலிருந்து விடுபட்டு மேனிலை நோக்கிய ஒரு சமூக அசைவியக்கத்துக்காகத் தொழிற்படத் தொடங்கியுள்ளனர். இதன் காரணமாக, தங்களது இன, மொழி உணர்வு பற்றியும் பண்பாட்டுத் தனித்துவம் பற்றியும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். தோட்டத்தின் சமூக, பொருளாதார வரையறைகளுக்கு அப்பாலுள்ள சமூக, பொருளாதார வட்டங்களுக்குச் செல்ல விழைகின்றனர். இந்த அசைவியக்கம் மலையகம் என்ற கோட்பாட்டுக்கு வலுவளிக்கின்றது. ஆந்தக் கோட்பாட்டினால் வலுப்பெறுகின்றது. இந்தப் பெருந்தோட்டத் தமிழ்ச் சமூகத்தின் அசைவியக்கங்களை, அந்த அசைவியக்கங்களின் முக்கியத்துவத்தை, அவற்றின் தன்மைகளை எண்ணிக்கொள்ள முனையும் பொழுது, அதன் வரலாற்று அடிப்படையையும் அதன் (சமூக) உருவாக்க அம்சங்களையும் மறந்து விடுதல் கூடாது. இந்தச் சமூகம் வரலாற்றில் மிக மோசமான காலனித்துவ சுரண்டலுக்கும், தேசிய ஒடுக்குமுறைக்கும் ஆட்பட்ட ஒரு குழுமமாகும்."

தனியாகத் தீர்க்கப்படாதிருக்கும் நிலையில், அது காரணமாகவே ஆயுதந்தாங்கிய தீவிரவாதப் போராட்டமொன்று நடந்து கொண்டிருக்கும் பொழுது, மொழிப் பண்பாட்டொருமை காரணமாக இந்திய வம்சாவழியினர் இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழர்களுடன் எத்துணை இறுக்கமாக இணைந்து கொள்வார்கள், அந்த இணைவு எத்தகைய தேசியத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சிந்திப்பது இயல்பான ஒன்றேயாகும்.

இந்த நான்கு அம்சங்களும் தம்மியல்பாகத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், பெருந்தோட்டத் தமிழ்ச் சமூகத்தினுள்ளே சமூக, பண்பாட்டு விடயங்களில் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் தமது லயன் வாழ்க்கை மரபிலிருந்து விடுபட்டு மேனிலை நோக்கிய ஒரு சமூக அசைவியக்கத்துக்காகத் தொழிற்படத் தொடங்கியுள்ளனர். இதன் காரணமாக, தங்களது இன, மொழி உணர்வு பற்றியும் பண்பாட்டுத் தனித்துவம் பற்றியும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். தோட்டத்தின் சமூக, பொருளாதார வரையறைகளுக்கு அப்பாலுள்ள சமூக, பொருளாதார வட்டங்களுக்குச் செல்ல விழைகின்றனர். இந்த அசைவியக்கம் மலையகம் என்ற கோட்பாட்டுக்கு வலுவளிக்கின்றது. அந்தக் கோட்பாட்டினால் வலுப்பெறுகின்றது. இந்தப் பெருந்தோட்டத் தமிழ்ச் சமூகத்தின் அசைவியக்கங்களை, அந்த அசைவியக்கங்களின் முக்கியத்துவத்தை, அவற்றின் தன்மைகளை எண்ணிக்கொள்ள முனையும் பொழுது, அதன் வரலாற்று அடிப்படையையும் அதன் (சமூக) உருவாக்க அம்சங்களையும் மறந்து விடுதல் கூடாது. இந்தச் சமூகம் வரலாற்றில் மிக மோசமான காலனித்துவ சுரண்டலுக்கும், தேசிய ஒடுக்குமுறைக்கும் ஆட்பட்ட ஒரு குழுமமாகும். இவை காரணமாக இதன் பிரச்சினைகளும் இந்தச் சமூகத்தின் துயர் துடைப்பு முயற்சிகளும் ஐ.நா.நிறுவனங்களினதும், (சர்வதேச தொழில் ஸ்தாபனம், ஐ.நா.சிறார் அவசரநிதியம்) சர்வதேச மனித நல நிறுவனங்களினதும் சிரத்தையாயிற்று.

தாழ்வுற்று ஒதுங்கித் தங்களுக்குரிய சுதந்திரங்கள், உரிமைகள் யாவை என்பதையே அறியாது வாழ்க்கை நடத்திய இவர்கள் பற்றிச் சர்வதேச சிரத்தை ஏற்பட்ட பொழுது, இவர்களைப் பற்றிய பல எழுத்துக்கள் தோன்றின. சர்வதேச முக்கியத்துவம் கொண்ட அந்த எழுத்துக்கள் பெரும்பாலும் இவர்களிடத்து நிலவிய, நிலவும் இல்லாமைகள் பற்றியனவாகவேயமைந்தன. வாக்குரிமை இல்லாமை, வசிப்பிடமில்லாமை, கல்வி இல்லாமை, சுகாதார வசதியில்லாமை, என இவர்களைச் சூழச் சுற்றியுள்ள இல்லாமைகள் பற்றிய ஆய்வுகளே பல்கிப் பெருகின. இத்தகைய ஆய்வுகள் பிரதானமாக ஆங்கிலத்திலேயே வெளியிடப்பட்டன. இம்மக்கள் எதிர்நோக்கும் அரசியல், மனித நலப்பிரச்சினைகள் பற்றி ஆராயும் இவ் ஆய்வுகள், இனப்பிரச்சினையானது எவ்வாறு, ஒரு காலனித்துவ உற்பத்தி முறைமை காரணமாகத் தோன்றிற்று என்பதையும் அந்த உற்பத்தி முறைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு மனிதாபிமானமற்ற முறையில் மனிதர்களைச் சமூக, பண்பாட்டு எல்லைகளுக்கு அப்பால் உழைப்புக்கான பண்டப்பொருட்களாக ஏற்றி இறக்கித் தங்கள் விலையைப் பற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாத அளவுக்கு அறியாமையிலும், இல்லாமையிலும் அவர்களை வைத்திருக்க முயன்றது என்பதையும் மிகச்சிறப்பாக வெளிக்கொணர்ந்தன.

இத்தகைய ஆய்வுகளுள், மிகச் சிலவற்றைத்தவிர (உ-ம் ஜெயராமன் என்பவர் எழுதிய (Caste continuities in Ceylon – A study of the social structures of those plantations, Bombay 1974) பெரும்பாலானவை பெருந்தோட்டத் தமிழரிடையே சமூக ஒழுங்கமைப்புப் பற்றியோ அன்றேல் அதன் வழியாகக் கட்டமைக்கப்பெற்ற பண்பாடு பற்றியோ கவனஞ் செலுத்தவே இல்லை. இத்தகைய சூழலில் இந்தக் குழுமத்தின் சமூகத் தனித்துவத்தைப் பேணுவதில் அவர்களது பண்பாடு வகிக்கும் இடம் பற்றியும், குழுமத்தினூடாகவே தோன்றி வளர்ந்த தலைமைத்துவத்தின் பண்பாடு (அதாவது அதன் தொழிற்சங்கத் தலைமையின் தன்மை) பற்றியும் அத்தலைமைத்துவப் பண்பாடு (அதாவது இந்தக் குழுமத்தின் அரசியற் பண்பாடு) இந்தச் சமூகத்தின் சமூக, பண்பாட்டுப் பெருவட்டத்தினால் தீர்மானிக்கப்பட்ட தன்மை பற்றியும் ஆய்வுகள் செய்யப்படாதுள்ளமை ஆச்சரியத்தை தரும் நிகழ்வன்று.

இக்கட்டத்தில், "மலையகம்" என்ற பொதுப்படையான பதத்தினாற் சுட்டப்பெறும் சமூகமானது தன்னைத்தானே எவ்வாறு நோக்கிக் கொள்கின்றது என்பது பற்றியும் அது எந்தெந்தக் காரணிகள் தன்னை அடக்கியொடுக்கி வைத்திருக்கின்றன எனக் கருதுகின்றது என்பது பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகின்றது. இந்த வினாக்களுக்கான விடையைத் தேடும் பொழுது, இம்மக்களிடையே ஏற்பட்டுள்ள கல்வி வளர்ச்சியும், இனக்குழுமப் பிரக்ஞையும் (உணர்வும்) மிக முக்கியமாக ஆராயப்பட வேண்டிவையாகின்றன. அப்பொழுதுதான் ஒரு முக்கியமான வினா மேற் கிளம்புகின்றது. இவர்கள் தங்களைத் தாங்களே விடயி நோக்காக பார்க்கும் தன்மையைப் பெற்று விட்டனரா என்பதே அந்த வினாவாகும். இதற்கான விடையைத் தேடும் பொழுது தமிழில் அதாவது இவர்களது தாய்மொழியில் இந்தப் பிரச்சினைகள் பற்றியும் இவர்களது அரசியல் சமூகப் பிரக்ஞை பற்றியும் எத்தகைய எழுத்துக்கள் தோன்றியுள்ளன என்பது பற்றியும் அறிந்து கொள்வது இதனை விளங்கிக் கொள்வத்கான முக்கியமான தடயமாக மேற்கிளம்பும்.

மலையக இலக்கியத்தைக், குறிப்பாக மலையக எழுத்தாளர்களால் எழுதப்பெற்ற ஆக்க இலக்கியங்களை இந்தக் கண்ணோட்டத்திற் பார்ப்பது மிக அவசியமாகும். அதாவது தங்களது வாழ்க்கையின் உணர்ச்சிமையங்கள் பற்றிப் பேசப்புறப்படும், சித்திரிக்க எத்தனிக்கும் எழுத்தாளர்களுள் எத்தனை பேர் தமது சமூகத்தின் அசைவியக்கம் பற்றிய யதார்த்த பூர்வமான அறிவினையுடையவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது ஒரு முக்கியமான வினாவாகும். அத்தகைய எழுத்துக்களை வாசிப்பதற்கும் வாசித்துக் கிரகித்துக் கொள்வதற்குமான ஒரு வாசகர் கூட்டம் அந்தச் சமூகத்தினுள் வளர்ந்து விட்டதா என்பதும் மிக மிக முக்கியமான விடயங்களாகும்.

இலக்கிய விமர்சன ஆய்விலும், இலக்கிய வரலாற்று ஆய்விலும் இது ஒரு முக்கியமான வினாவாகும். அதாவது ஒரு குழுமத்தின் பிரச்சினைகளை (அது பற்றிய சுய பார்வைகளை மாத்திரமல்லாது உண்மையான பிரச்சினை மையங்களை) அறிந்து கொள்வதற்கு, அந்த மொழியிலுள்ள எழுத்துக்கள் (ஆக்க இலக்கியங்கள் மாத்திரமல்ல, கட்டுரைகள், விமர்சனங்கள் ஆகிய எழுத்துக்களும்) எந்த அளவுக்கு பயன்படுகின்றன என்பது மிகச் சுவாரசியமான ஒரு தேடலாகும். ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை அது நிலவும் சமூகம் பார்க்கும் முறைமையினை அச்சமூகத்தின் முதல் மொழி எழுத்துக்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆந்த முதல் மொழி எழுத்துக்கள் அம்மொழிக்குழுமத்தினரின் சமூக உளவியலை எடுத்துக் காட்டுவனவாகவே இருக்கும். இலங்கை இந்தியத் தமிழ் எழுத்துக்களிலிருந்து இரண்டு உதாரணங்களை இங்கு எடுத்துக் காட்டலாம்.

1. சாதிகளைப் பற்றிப் பட்டவர்த்தனமாக எழுவதிற் காணப்படும் தயக்கம். இலங்கைத் தமிழரிடையேயும் இத்தயக்கம் மிகத் துல்லியமாகத் தெரிகிறது.

2. திராவிட இயக்கம் பற்றிய காய்தல் உவத்தலற்ற, வரலாற்றாய்வு முறைகளுக்கிடையே எழுதப் பெற்ற ஒரு தமிழ் நூல் இதுவரை தோன்றாமை.

இலக்கியம், எழுத்துப்பற்றிய ஒரு முக்கியமான சமூகவியலுண்மை இதன் வழியாகத் தெரியவருகின்றது. அதாவது, ஒரு சமூகம் தன்னைத்தானே விடயி நோக்காகப் பார்க்கத் தொடங்கும் பொழுது தான், அதற்கான மனநிலையையும், நோக்கையும் பெறும் பொழுது தான் அந்தச் சமூகம் பற்றிய உண்மையான விமர்சன பூர்வமான எழுத்துக்கள மேற்கிளம்பும். இதனாலேதான் தமிழில் இன்னும் தமிழ் மக்களிடையே நிலவும் சமூக அமைப்பு, சாதியமைப்பு குறிப்பாகச் சாதிவரன் முறை பற்றிய ஆய்வுகள் வரத்தொடங்கவிலலை எனலாம். இலங்கைத் தமிழரிடையே 1960ஆம் ஆண்டுகள் வரை, ஆக்க இலக்கியத்திலேயே சாதிப் பிரச்சினையை உள்ளது உள்ளபடி எடுத்துப் பேசும் தன்மை இருக்கவில்லை. சமதர்மக் கருத்து வளர்ச்சி, பொதுவுடைமை நோக்குப் பரவல், சமூக சமத்துவத்துக்கான போராட்டங்களின் முனைப்பு ஆகியன வளர்ந்து சென்ற ஒரு கட்டத்திலேயே, அதுவும் அந்த வளர்ச்சி யோடு சம்பந்தப்பட்டவர்களினதும் (டானியல், ஜீவா, ரகுநாதன், பெனடிக்ற் பாலன் முதலியோர்) அந்தக் கருத்து நிலையை ஏற்றுக் கொண்டவர்களினதும் (கணேசலிங்கம்) எழுத்துக்களிலேயே அந்த நோக்குத் தென்பட்டது. தமிழகத்துப் புனைகதை வளர்ச்சியில் 1960களில் ஏற்பட்ட பொருள் விரிவுக்கான காரணத்தையும் இத்தகைய ஒரு பின்னணியிலேயே விளங்கிக் கொள்ளலாம். ஜெயகாந்தன், செல்வராஜ், சின்னப்பாரதி முதலியோரும், இவர்களுக்குச் சற்றுப் பின் வந்த சமுத்திரம் முதலியோரும் தமிழகத்தின் சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட சமூக ஜனநாயக விஸ்தரிப்புக்கான இலக்கிய உதாரணங்களாவர்.

வர்க்க உணர்வுடன் தான் வரலாறு (எழுதப்படத்) தொடங்குகின்றது என்பது மார்க்சின் முக்கிய கருத்துக்களில் ஒன்று. மலையகம் பற்றித் தமிழில் வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களுக்கும் இது பொருந்தும். மலையகத்தின் கல்வி வளர்ச்சி ஏற்படத் தொடங்கி அந்த அமைப்பினூடாக ஆக்கியற் திறமைசாலிகள் வரத்தொடங்கவே மலையக இலக்கியம், மலையகச் சமூகத்தை விடயி நோக்காகப் பார்க்கத் தொடங்கியது. இந்த வளர்ச்சிப் போக்கினை என்.எஸ்.எம்.ராமையா, தெளிவத்தை ஜோசப் ஆகியோரிடத்துக் காணலாம். மலையகத்தின் பண்பாடு பற்றிய விடயி நோக்கான பார்வை, அச்சமூக்தைப் புறநோக்காகப் பார்த்தமை ஆங்கிலத்திலேயே மிக மிகக் குறைவாக இருக்கும் பொழுது, தமிழில் அத்தகைய எழுத்துக்கள் எப்படித் தோன்ற முடியும்? நமது சமூகங்களிலுள்ள எழுத்தறிவுடையோர் மட்டத்தில், அதாவது எழுத வாசிக்கத் தெரிந்தோர் மட்டத்தில் நமது சமூகம் பற்றிய விடயி நோக்கைப் பரப்புவதற்கு நமது மொழியிலேயே அது பற்றி எழுதுவது அவசியமாகிறது. இந்த ஒரு முக்கியமான உந்துதல் காரணமாகவே இந்த ஆய்வு தமிழிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

நமது சமூகம் பற்றிய தெளிவான பார்வை நம்மிடத்தேயில்லையெனில், நமது சமூகத்தில் எவ்வித முன்னேற்றங்களையும் நாம் உண்டாக்கிவிட முடியாது. இக்கட்டத்தில் மொழியும் சமூகமும் பற்றிய ஓர் உண்மையினை மீள நினைவுறுத்திக் கொள்ளல் பொருத்தமானதாகும். "உனது மொழியின் ஆற்றலுக்கு அப்பால் உன்னாலே சிந்திக்க முடியாது". "உனது சிந்தனையின் பரப்புக்கும் வளர்ச்சிக்கும் ஏற்பவே உனது (சிந்தனை) மொழியும் வளரும்".

மலையகத்தின் அச்சாணியாகவுள்ள பெருந்தோட்டத் தமிழரின் இல்லாமைகளைப் புரிந்து கொள்வதற்கும், அந்த இல்லாமைகளிடையே அவர்கள் எப்படி வாழ்ந்து வந்துள்ளனர், வாழ்ந்து வருகின்றனர் என்பதைப் புரிந்து கொள்வதற்கும் அவர்கள் சமூக ஒழுங்கமைப்பு, பண்பாட்டமைவு பற்றி அறிந்து கொள்வது அவசியமாகும். அதுவும் அவர்கள் மொழியிலேயே அந்த எழுத்து இருப்பின் அவர்களிடத்து அப்பிரச்சினைகள் பற்றிய பிரஞ்ஞை ஏற்படுவதற்கான சூழல் ஏற்படும். இந்நிலையில் பண்பாடு பற்றிய ஒரு வரைவிலக்கணத்தை ஏற்றுக் கொள்ளல் அவசியமாகின்றது. பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட் கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்த கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள், ஆகியவற்றின் தொகுதியாகும். பண்பாடு என்பது ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி நிலை, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்.

பண்பாடு என்பது வெளிப்பார்வைக்கு ஒரு நடத்தை முறையாகவே தோன்றினாலும், உண்மையில் அது ஓர் அறிகை முறைமையே. பண்பாடு என்பது அந்த மக்கட் கூட்டத்தினரிடையேயுள்ள சகலரும் பகிர்ந்து கொள்ளும் கருத்துக்கள், நடைமுறை உத்திகள், வழிநடத்து முறைமைகள் ஆகியனவாகும். அதாவது உண்மையில் பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட குழுமத்திடையே அதன் அங்கத்தவர்கள் கொள்ளும் அர்த்தங்களுக்கான சூழமைவுகளைக் கொண்டதாகும். பண்பாடு மனிதர்களைப் பக்குவப்படுத்துவது. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறைக்கு அந்தக் குழுமத்தின் மக்களை இணைய வைப்பது. எனவே பண்பாட்டை அறிவதன் மூலம் நாம்:

(அ) அவர்கள் வாழ்க்கை எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்பதையும்

(ஆ) அந்தப் பௌதீக எண்ணக்கரு நிலைப்பட்ட ஒழுங்கமைப்பு அவர்களிடையே சமூக மாற்றம் பற்றியும் அந்த மாற்றத்தை (மாற்றங்களை) ஏற்றுக் கொள்வது பற்றியும் ஏற்படும் நிலைப்பாடுகளுக்கு எவ்வாறு காரணமாக அமைகின்றது என்பதையும்,

(இ) அவர்கள் தங்களை எவ்வாறு பார்க்கிறார்கள், மற்றவர்களை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதையும்

(ஈ) நடைபெறும் மாற்றங்கள் யாவை (அந்த மாற்றங்களின் அளவும் அவை ஏற்படுத்தும் மனநிலை மாற்றங்கள் யாவை) என்பதையும் அறிந்து கொள்ளலாம். இத்தகைய ஓர் அறிகை மூலமே அந்த மக்களின் வாழ்க்கையில் மதம், மொழி, பண்பாடு ஆகியன பெறும் இடத்தை, அவை வகிக்கும் பங்கை, அறிந்து கொள்ளலாம்.

மலையக பெருந்தோட்டத் தமிழரைப் பொறுத்தவரையில் அவர்களுடைய மனப்பதிவுகள், மதப் பெறுமானங்கள், வாழ்க்கை நோக்கு, மொழியுணர்ச்சி போன்றவற்றை அறிந்து கொள்ளாமல், அவர்களது இல்லாமைகளைப் போக்குவதற்கு எடுக்கப்பெறும் நடவடிக்கைகளின் வன்மையை அறிந்துக் கொள்ள முடியாது. மலையகப் பெருந்தோட்டத் தமிழர்களின் வாழ்க்கை முறைமை, வாழ்க்கை நோக்குப் பற்றியறிந்து கொள்வதற்கு, அவர்களது பண்பாட்டில் இடம்பெறும் கீழ்காணும் விடயங்கள் பற்றிய விவரமான அறிவு அத்தியாவசியமாகும்.

1. இந்தச் சமூகத்தின் தனித்துவமான பண்புகளை எடுத்துக் காட்டும் அதன் கலைவெளிப்பாடுகள் பற்றிய அறிவு.
   (அ) வாய்மொழி நிலைப்பட்டவை ஐதீகங்கள், கதைகள், பாடல்கள்,
   (ஆ) இசை மரபுவழியானது, நவீனமானது, - இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று ஊடாடும் முறைமை
   (இ) நடனம் - மரபுவழியானது, நவீனமானது இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று ஊடாடும் முறைமை
   (ஈ) நாடகம் மரபுவழியானது, நவீனமானது இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று ஊடாடும் முறைமை
   (உ) இலக்கியம்.
   (ஊ) ஓவியம் முதலான கட்புலக் கலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **மதம்**
(அ) வழிபாடு - வீட்டு மட்டம், சாதி மட்டம், பொது மட்டம்
(ஆ) வழிபடப்பெறும் தெய்வங்கள், வழிபடு முறைகள், தெய்வங்கள் வகுத்து நோக்கப்படும் முறைமை (நல்லதெய்வம், துர்தேவதை ஆகிய கோட்பாடுகள்)
(இ) விதிமுறையான கோயில்கள் - கோயில் ஒழுங்கமைப்பு, பூசை விவரங்கள், திருவிழாக்கள்
(ஈ) கிறிஸ்தவ தேவாலயங்கள் - கிறிஸ்தவப் பிரிவுகள், விழாக்கள் பூசை விபரங்கள், திருச்சபையின் ஒழுங்கமைப்பு
(உ மதத்தொடர்புகளும் அவற்றுக்கான தேவைகளும் இந்து கிறிஸ்தவ, இந்து - பௌத்த, இந்து - இஸ்லாம்.
(ஊ வாழ்க்கைச் சடங்குகள் பிறப்பு, பக்குவப்படல், விவாகம், மரணம் பற்றிய சடங்குகள் (பால் வகுப்பும் (Gender) சடங்குகளும்)

3. **சாதியும் அதிகார அடுக்கு வரன்முறையமைப்பும்**
(அ) சாதி பற்றிய பாரம்பரிய நியமங்கள்
(ஆ) சாதி பற்றிய சமகால நிலை
(இ) சாதிகளின் அதிகார அடுக்கு வரன்முறையமைப்பு

4. **குடும்பம்**
(அ) குடும்பம் பற்றிய எண்ணக்கரு: மையக்குடும்பம், விஸ்தரிக்கப்பட்ட குடும்பம்.
(ஆ) குடும்பமும் திருமணமும்
(இ) திருமண முறைகள்
(ஈ) விவாக விலக்கும் வைதவ்யமும்
(உ) குழந்தைகள்
(ஊ) பால்வகுப்பும் குடும்பமும்

5. **உணவு**
(அ) நாளாந்த உணவு
(ஆ) விசேட உணவு
(இ) வைபவ உணவு
(ஈ) சமையல் முறையும் சமையற் பாண்டங்களும்

6. **சுகாதாரமும் மருத்துவமும்**
(அ) நோய் பற்றிய எண்ணக்கரு
(ஆ) பாரம்பரிய மருந்துகள்
(இ) மதமும் மருந்தும்
(ஈ) நவீன மருத்துவம்

7. **வதிவிடம்**
(அ) வதிவிட வகைகள்
(ஆ) வதிவிடமொன்றினுள் ஒழுங்கு பற்றிய எண்ணக்கரு

8. **அணிகலன்கள்**
(அ) பால்வகுப்பும் நகைகளும்

9. **ஆடை**
(அ) பால்வகுப்பும் ஆடைகளும்
(ஆ) அன்றாட, விசேட, வைபவ ஆடைகள்
(இ) ஆடை வகைகள்
(ஈ) ஆடையும் சமூக ஒழுங்கமைப்பும்

10. **விளையாட்டுக்களும் பொழுது போக்குகளும்**
(அ) மரபுவழி வருபவை
(ஆ) நவீனமானவை
(இ) பால் வகுப்பும் விளையாட்டும் பொழுது போக்கும் ஆண்களுக்குரியவை, பெண்களுக்குரியவை.

11. **இலட்சிய நியமங்கள்**
(அ) பால் வகுப்புப் பற்றியவை
(ஆ) அழகு பற்றியவை

12. **அறிவு பண்பாட்டுக் கையளிப்பு**
(அ) மரபுவழிக் கல்வி முறைமை
(ஆ) இன்றைய பாடசாலை முறைமை
(இ) பாடசாலையும் சமூகமும்
(ஈ) கல்வியும் சமூக அசைவியக்கமும்
(உ) பாரம்பரியத் தொழிற்பயிற்சிகள்

13. **வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் பங்கு**
(அ) பத்திரிகை
(ஆ) வானொலி
(இ) திரைப்படம்
(ஈ) தொலைக்காட்சி

14. **இன்றைய அரசியல், சமூக வைபவங்களும் அவை கொண்டாடப்படும் முறைகளும் அவற்றில் பாரம்பரியக் கலைகள் பெறும் இடம்**

15. **பண்பாடும் மாற்றமும் மாற்றங்களை இனங்கண்டு கொள்ளலும், அவை பற்றிய மனப்பதிவுகளும்.**

மக்களின் முன்னேற்றம் என்பது அடிப்படையில் ஒரு கருத்துநிலைப் பிரச்சினையாகும். முன்னேற்றம் என்பது யாது? மலையகச் சூழலில் முன்னேற்றம் என்டது யாது? மலையகச் சூழலில் முன்னேற்றம் என்பது எவ்வெவற்றைச் சுட்டி நிற்கும். எந்த நிலையிலிருந்து எந்த நிலைக்கான முன்னேற்றம் என்பன கருத்து நிலைப்பட்ட (ideological) பிரச்சினைகளேயாகும். முன்னேற்றம் என்ற கருதுகோளின் அடிப்படையிலே தெளிவில்லாதிருப்பின், அந்த இலக்கு எய்தப்பட முடியாததாகி விடும் அத்துடன் முன்னேற்றம் என்பது அளவு ரீதியான பௌதீக மாற்றங்களால் உண்டாகும் தரரீதியான (மனோநிலை, வாழ்க்கை நோக்கு) மாற்றங்களைக் குறித்து நிற்பதுடன் பொதுவாக மனிதனின் மானுடத் தன்மையின் வாய்ப்பான விகசிப்புக்கும் வெளிப்பாட்டுக்குமான வளர்ச்சியையும் குறிப்பதாகும். இந்த மாற்றங்களும், இந்த மாற்றங்கள்வழி வரும் மானுட விகசிப்புக்களும், பண்பாடு என்னும் தளத்தில் நிலைகொண்டவையாகும். இவையாவும் ஒரு பண்பாட்டினூடாக வந்து, அந்தப் பண்பாட்டின் உயர்வுக்கு உதவுவனவாக இருக்கும்.

அரசியல், பொருளாதார உரிமை மறுதலிப்புக்களால் நீண்டகாலம் வளர்ச்சியையே அறியாதிருந்த பெருந்தோட்டத் தமிழ்ச் சமூகத்தின் தனித்துவப் பேணுகைக்கும், முன்னேற்றச் சாத்தியப் பாடுகளுக்கும் இந்தச் சமூகத்தின் பண்பாடு எந்த அளவுக்கு உதவியுள்ளது, உதவும் என்பதை அறிவது இந்தச் சமூகத்தினை விளங்கிக் கொள்வதற்கான ஒரு முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடயமாகும். இவ்வாறு நோக்கும் போது தான் பண்பாடு (Culture) என்பது, கருத்து நிலையுடன் (ideology) மிக நெருங்கிய தொடர்புடையது என்பது தெரியவரும். கருத்துநிலை என்பது யாது என்பதை ஜேம்ஸ் கிளக்மன் என்பவர் விளக்கியுள்ளார்.

"சமூக ஊடாட்டம் (அதாவது சமூகத்தினுள் ஏற்படும் உறவுப் பரிமாறல்கள்) வளரத் தொடங்க, அந்தச் சமூகத்தில் வாழும் மனிதர்கள் உலகம் பற்றியும், தங்களது சொந்தச் சமூக வாழ்க்கை பற்றியும், தெய்வம், சொத்து, அறம், நீதி ஆகியன பற்றியும் எண்ணக் கருத்துக்களையும் நோக்குக்களையும் உருவாக்கிக் கொள்கின்றனர். இவற்றினடியாகச் சமூகம் பற்றியும் அரசியல், சட்ட, மத, கலை, தத்துவநோக்குப் பற்றியும் கருத்துருவமான ஒரு பொதுவான எண்ண அமைப்பு வளரத் தொடங்குகின்றது. அந்த எண்ண அமைப்புத் தான் "கருத்துநிலை" என்று குறிப்பிடப்படுவதாகும். மனிதர்கள் தம் முன்னேயும், புறத்தேயுமிருக்கும் இயற்கைச் சூழலோடு ஏற்படுத்திக் கொள்ளும் செயல்வன்மையுடைய உறவுகளாலேயே மேற்குறிப்பிட்ட நோக்குகளும் எண்ண அமைப்புக்களும் ஏற்படுகின்றன".

கருத்துநிலை என்பது சமூகங்களின் வரலாற்று நிலைப்பட்ட சீவியத்துக்கு முக்கியமானது என்று அல்தூசர் என்னும் சிந்தனையாளர் வற்புறுத்தியுள்ளார். பண்பாடு பற்றி ஏற்கனவே தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தை நோக்கினால், பண்பாடு என்பது கருத்துநிலை தோன்றுவதற்கான தளமாகவிருக்கும் உண்மை தெரியவரும். இன்னும் சற்று ஊன்றி நோக்குவோமானால், எந்த ஒரு பண்பாட்டுக்கும் அதற்குரிய அக அமைப்பையும் முழுமையையும் தந்து, அதனை உயிர்ப்புள்ள ஒன்றாக்குவது கருத்துநிலையே என்பது தெளிவாகும். நாம் இது வரை பார்த்தவற்றிலிருந்து பண்பாடு என்பது வாழ்க்கை முறையினடியாக வருவதென்பதும், கருத்துநிலை என்பது பண்பாட்டைத் தளமாகக் கொண்டது என்பதும் கருத்துநிலையே மனிதர்களின் மனோபாவங்களையும், வாழ்க்கை நோக்குகளையும் தீர்மானிக்கின்றது என்பதும் தெரியவரும். இந்த அறிவுப் பின்புலத்தில், மலையகத் தமிழரை நோக்குவோமேயானால் அவர்களது தன்மைகளையும், நிலைப்பாடுகளையும் விளங்கிக் கொள்வதற்கு, அவர்களது பண்பாடு பற்றியும் அவர்களிடையே நிலவும் கருத்துநிலை பற்றியும் தெளிவான அறிவு இருத்தல் வேண்டுமென்பது தெளிவாகும்.

(இக்கட்டுரை இலங்கை பெருந்தோட்டத் தமிழ் மக்களின் பண்பாடும் கருத்து நிலையும் பற்றிய ஆய்வின் முதற்கட்ட முடிவில் வெளியிடப்பட்ட கட்டுரைத் தொகுதிக்கான அறிமுகமாகும். இக்கட்டுரையின் முக்கியத்துவம் கருதி ஆசிரியரின் பூரண அனுமதியுடன் கட்டுரையின் மேற்குறித்த பகுதி பிரசுரம் செய்யப்படுகின்றது.)

மல்லியப்பு சந்தி

சரித்திரம் படைக்கவென
சந்தியில் சந்தித்தோமே
சாதித்தது என்ன?
சிந்தித்தாயோ...

சத்தியாகிரகத்திற்காய்
சந்தியை அலங்கரித்தோம் - இந்த
சந்ததி காணாத
சரித்திரம் என நாம்
சத்தியம் செய்தோம்

நானூறு ரூபாய் கேட்டு
நாற்காலிக்கு மாலைபோட்டு
நாம் போட்ட
நாடகம் பார்க்க
அம்மாவின் நகையை
அடவு(கு) வைத்தோம் - எங்கள்
அவசரப்பசிக்குதவும்
அம்மாவின் காதுகளும்
இன்று பட்டினியாய்...

கொழுந்து கூடை விட்டெறிந்து
கொதித்தெழுந்துகுரலெழுப்பி
விழித்திருந்து வேண்டிநின்ற
மலையகமே! ஓரணியில்
சென்றது ஞாபகமுண்டு - சேர்ந்து
நின்றது ஞாபகமுண்டு
வென்றது ஏதுமுண்டா?

ஆதிகாரி, தொழிலாளி
ஆசிரியர், மாணவர்
ஆரசியல்வாதி,
இலக்கியவாதி என்று
'அண்ணனும் தம்பியுமாய்'
அனைவரும் ஓரணியில்
சென்றது ஞாபகமுண்டு - மேடையில்
நின்றது ஞாபகமுண்டு
வென்றது ஏதுமுண்டா?

எது வேண்டும்?
எதைக் கேட்டோம்?
என்ன கிடைத்தது?
எப்படி கிடைத்தது?
இவை இன்று
எம்முன்னே
விசுவரூபம்
எடுத்திருக்கும்
வினாக்கள்?

அந்தக் கறுப்புப்பட்டியை
நம் உரிமைக்குரலடக்கக்
கழுத்தில்
கட்டிக்கொண்டோமா?
அந்த வெள்ளைக் 'குல்லா'
இன்னும் எத்தனை
ஜென்மத்திற்கு எம்மை
மூடிவைத்திருக்கும்?

அன்று
அழைக்கப்பட்ட உறவுகள்
தொலைந்துவிட்ட இரவுகள்
ஒன்றிணைந்த தலைமைகள்
ஒட்டியிருந்த தவளைகள்
எல்லாம் இப்போது எங்கே?

நாம் மட்டும்
அதே சந்தியில்...

— ம.திலகர்

(பாட்டாளிவர்க்க காட்டிக்கொடுப்பு சத்தியாக்கிரகத்தின் ஒருவருட நிறைவு)
27-02-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

MAX MULTIMEDIA SYSTEMS

(Dealers in Computers, Accessories, Services upgrading & Maintenance)

UG 36, People's Park Complex,
Colombo - 11
Tel : 075 354553/4
Fax : 445659
Email : max@sierra.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

HAYLEY GRAPHICS

(Graphic Designing, Type setting & All Kinds of printing)
No : 889 -1/16, Maradana Road,
Colombo - 10
Tel : 684015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக கல்வி ஓர் எதிர்கால நோக்கு

- தையல் முத்து தனராஜ்

அறிமுகம்

கல்வியின் முக்கியத்துவம் பற்றிய ஒரு விழிப்புணர்வு இன்று மலையகத்தில் குறிப்பாக அதன் மையப்பகுதிகளில் பரவலாக ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. மலையகக் கல்வி உட்பட மலையக மக்களின் தனித்துவமான அடையாளம் குறித்து அறுபதுகளில் கருக்கொண்ட சிந்தனை ஊற்றுகள் எழுபதுகளில் வேகம் கொண்டு வளர்ந்தன. எனினும் 1983ல் நடந்தேறிய துர்பாக்கியமான நிகழ்வுகளைத் தொடர்ந்து இந்நாட்டில் வாழும் முழுத் தமிழினமுமே நிலைகுலைந்தபோது மலையகமும் அந்த ஊழிக் காற்றில் ஆடிப் போனதில் வியப்பில்லை. ஆனால் இன்று திரும்பவும் இந்நாட்டில் தனது அடையாளத்தையும் இருப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் மலையகம் ஈடுபட்டுள்ளது. எனவே அத்தகைய சமூக இருப்பின் அடிப்படைகளில் ஒன்றான கல்வி குறித்த கருத்தாடல்களும் ஆங்காங்கு நடைபெறுகின்றமை மகிழ்ச்சி தரக்கூடிய விடயமே.

எனினும் இத்தகைய கல்விச் சிந்தனைகளும், கல்விச் செயற்பாடுகளும் தனித்தனி தீவுகளாக சிதறிக் கிடக்கின்றனவே அல்லாமல் முழு மலையகத்தையும் தழுவிய ஓர் ஆழ்ந்த, முழுமையான, தந்திரோபாய சிந்தனையோ (STRATEGIC THINKING) அதன் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட ஒரு முழுமையான திட்டமோ (STRATEGIC PLAN) இல்லை என்பதை மலையகக் கல்வியில் கரிசனையும் ஆர்வமும் கொண்டுள்ளவர்கள் கவனத்திற் கொள்வது அவசியமாகும். கல்வி விருத்தியில் அன்றும் இன்றும் பின்தங்கி நிற்பது மலையக சமூகமே. இனி என்றுமே அவ்வாறு பின்தங்கி நிற்காமல் இந்நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களுக்கு நிகராக கல்வியில் முன்னேற வேண்டுமாயின் முழு மலையகத்தையும் தழுவிய ஒரு பெருந்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு இன்றைய அரசியல் சூழ்நிலை சாதகமாக இருப்பதால் மலையகக் கல்வி விருத்திக்கான ஒரு பெருந்திட்டம் பற்றிய விளக்கத்தை (AWARENESS) உருவாக்க இக்கட்டுரை முயல்கிறது. அதற்கு தேசிய கல்வி முறைமை, மலையகக் கல்வியின் இன்றைய நிலை ஆகிய விடயங்களை விளங்கிக் கொள்வது முக்கியமான.

தேசிய கல்வி முறைமை

இலங்கையின் கல்வி நீண்டகால வரலாற்றை கொண்டதெனினும் நவீன கல்வி முறைமை சுமார் 130 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டுள்ளது. 1869ல் பொதுப்போதனா திணைக்களம் அமைக்கப்பட்டமை இந்நாட்டின் நவீன கல்விமுறைமையின் தோற்றத்தைக் காட்டி நிற்கிறது. இப்பொதுப் போதனா திணைக்களமே பின் கல்வித் திணைக்களமாகவும் சுதந்திரத்துக்குப் பின்னர் கல்வி அமைச்சாகவும் பரிணாமம் பெற்றது. இத்திணைக்களம் அமைக்கப்பட்டமை ஒரு முறைசார் தேசிய கல்விமுறைமைக்கு அடித்தளமாக அமைந்ததெனினும் இன்றைய கல்வி வளர்ச்சிக்கான அடித்தளத்தை கல்வி மீதான விசேட ஆணைக்குழுவின் அறிக்கையே (கன்னங்கரா அறிக்கை - 1943) இட்டது எனலாம். வசதிப்படைத்தோரின் சொத்தாக விளங்கிய கல்வியை சகலருக்குமான கல்வியாக மாற்றியமைத்த பெருமை கன்னங்கரா அவர்களையேச் சாரும்.

இதனைத் தொடர்ந்து இந்நாடு பல்வேறு கல்விச் சீர்திருத்த குழுக்களையும் வெள்ளை அறிக்கைகளையும் கண்டுள்ளது. இந்த வரிசையில் இறுதியாக அமைவது தேசிய கல்வி ஆணைக்குழுவின் (1992) அறிக்கையாகும். இதன் அடிப்படையிலேயே தற்போதைய கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த ஐம்பது ஆண்டுகால கல்விச் சீர்திருத்தங்கள் காரணமாக இலங்கையின் கல்வி முறைமை ஒப்பீட்டளவில மிக உயரிய அடைவு மட்டங்களைக் காட்டிநிற்கிறது. எழுத்தறிவு வீதம், சேர்வு வீதம், ஆசிரியர் மாணவர் விகிதம் ஆகிய கல்விக் குறிகாட்டிகள் இலங்கையின் உயரிய கல்வி அடைவுகளுக்கு சான்று பகர்கின்றன. எனினும் இவ்வடைவுகள் யாவும் கல்வி முறைமையின் அளவு ரீதியான பரிமாணங்களைக் காட்டுகின்றனவே தவிர பன்பு ரீதியான வளர்ச்சிப் பரிமானத்தைக் காட்டி நிற்கவில்லை என்பது வேறு விடயம்.

சுமார் 20 மில்லியன் மக்களைக் கொண்டுள்ள இந்நாட்டில் சுமார் 4.2 மில்லியன் பிள்ளைகள் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு சுமார் இரண்டு இலட்சம் ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். 6.4 சதுர கிலோமீற்றர் பரப்புக்குள் ஒரு ஆரம்பப் பாடசாலையேனும் காணப்படுகிறது. 400 பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை காணப்படுகிறது. 12 பல்கலைக்கழகங்களும் ஐந்து பட்டமேற்கல்வி நிலையங்களும் உள்ளன. இவற்றில் சுமார் 42000 மாணவர்களுக்கு 3000 விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் கற்பிக்கின்றனர். இவை தவிர பலநூறு தொழில்சார் கல்விநிலையங்களை அரசாங்கமும், தனியார் முகவர்களும் நிர்வகிக்கின்றனர். ஆரசின் வருடாந்த கல்விச் செலவினம் சுமார் 27000 மில்லியன் ரூபாய்களாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்று வீதமாகவும் மொத்தப் பொதுச் செலவினங்களில் 10.6 வீதமாகவும் காணப்படுகிறது.

தேசியக் கல்வி முறையின் அளவுசார் பரிமாணங்கள் ஏனைய அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் கல்வி அடைவுகளோடு ஒப்பிடும் போது பாராட்டுக்குரியவை. கடந்த இரு தசாப்தங்களாக இந்நாட்டில் காணப்படும் அபிவிருத்திக்கு சாதகமற்ற சூழ்நிலைகளின் காரணமாக பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் இலங்கையின் கல்விச் சாதனைகளை விஞ்சி விட்ட போதிலும் இன்றும் 864 டொலர் தலா வீத வருமானம் கொண்ட ஒரு நாடு என்ற அடிப்படையில் இலங்கையின் கல்விச் சாதனைகள் வியப்புக்குரியவைதான்.

இவ்விடயத்தில் வேதனைக்குரியதென்னவெனில் இந்நாட்டின் கல்வி அபிவிருத்தி மலையகக் கல்வியை உள்ளீர்த்துக் கொள்ளவில்லை என்பதாகும். இதற்கு பல்வேறு அகக் காரணிகளும் புறக் காரணிகளும் உள்ளன. இவற்றில் மிகவும் அடிப்படையானது மலையகக் கல்வி மேம்பாடு நோக்கிய அரசாங்கத்தின் உறுதிப்பாடு (political Will) இன்மையாகும். 1943ல் தேசிய கல்வி முறைமைக்கான ஓர் உறுதியான அடித்தளம் திரு.கன்னங்கரா அவர்களால் இடப்பட்டபோது தேசிய கல்வி முறைமையின் ஓர் அங்கமாக மலையகக் கல்வி சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இலங்கையின் தேசிய கல்விமுறைமையின் பிதாமகரான திரு.கன்னங்கரா மலையகக் கல்வியை முற்றுமுழுதாக நிராகரித்ததோடு **"மலையகக் கல்வி என்பது இந்திய முகவரின் பொறுப்பு"** எனவும் தட்டிக்கழித்தமை மலையக சிறார்களுக்கு அவர் செய் வரலாற்றுத் துரோகமாகும். மலையகக் கல்வி முறைமையை தேசிய கல்வி முறைமையின் ஓர் அங்கமாக கற்றுக் கொள்ளவேண்டுமென்னும் கோரிக்கையை முன்வைத்த மாத்தளை பாராளுமன்ற உறுப்பினர் திரு.அலுவிகாரைக்கும் அக்கோரிக்கையை நிராகரித்த திரு.கன்னங்கராவுக்கும் நடைபெற்ற விவாதம் மலையகக் கல்வி வரலாற்றில் ஒரு கறைபடிந்த சம்பவமாகும்.

மலையகத்தை "கல்வி ரீதியாகத் தனிமைப்படுத்தும்" முயற்சிகள் 1970கள் வரை தொடர்ந்து நீடித்தன. சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த தேசிய அரசுகளும் காலனித்துவ அரசாங்கங்கள் கொண்டிருந்த அதே "மாற்றாந்தாய்" மனப்பான்மைகளையே கொண்டிருந்தன. இந்நாட்டின் மலையகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கல்விக்கு அரசாங்கம் பொறுப்பாக இருந்த போது பெருந்தோட்டங்களில் மாத்திரம் மலையகச் சிறார்களின் கல்விக்கு கல்வியுடன் எந்த தொடர்பும் இல்லாத தோட்டத்துரை பொறுப்பாகவிருந்தார். இந்த நிலைமை 1970கள் வரை மாற்றப்படவில்லை. 1960களில் அரசு நன்கொடைபெற்ற தனியார் பாடசாலைகள் ஒரே இரவில் தேசியமயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தினும் பெருந்தோட்டப் பாடசாலைகள் உள்வாங்கப்பட வில்லை. மலையகப் பிள்ளைகள் தேசிய கல்விமுறைமையின் நன்மைகளைத் தாமும் பெற்றுக் கொள்ள இன்னுமொரு பதினைந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. 1970 □77 காலப்பகுதிகளில் 24 தோட்டப்பாடசாலைகளும் 1977-94 காலப்பகுதிகளில் ஏனைய தோட்டப்பாடசாலைகளும் படிப்படியாக அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. ஒரே இரவில் சகல தனியார் பாடசாலைகளும் (உதவி நன்கொடைபெறாதவை தவிர்ந்த) அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட இந்நாட்டில் 800 தோட்டப்பாடசாலைகளைப் பொறுப்பேற்க சுமார் இருப்பத்தைந்து ஆண்டுகள் சென்றன!

மலையகக் கல்வியின் இன்றைய நிலை

இன்றைய மலையகக் கல்வி முறைமை சுமார் 800 பாடசாலைகளையும் 5000 ஆசிரியர்களையும் இரண்டு இலட்சம் மாணவர்களையும் கொண்டு இயங்குகிறது. மலையகத்தில் தோட்டப் பாடசாலைகள் என ஒரு பிரிவு இன்றில்லை. சகல பாடசாலைகளும் தேசிய பாடசாலை முறைமைக்குள் உள்ளீர்க்கப்பட்டு விட்டன. ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக கொட்டகலை யதன்சைட்டில் ஓர் ஆசிரியர் கலாசாலையும் பத்தனையில் ஒரு கல்வியியல் கல்லூரியும் இயங்குகின்றன. கடந்த இரு தசாப்தங்களில் மலையகத்தைச் சேர்ந்த கணிசமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக ஆரம்பக்கல்வியை மலையக ஆசிரியர்களே பொறுப்பேற்றுக்கொண்டு விட்டனர். ஒரு சிலவற்றைத்தவிர சகல பாடசாலைகளிலும் அதிபர்களாக பதவி வகிப்பவர்களும் மலையகத்தில் பணியாற்றும் கல்வி அதிகாரிகளிலும் கணிசமானோர் மலையகத்தைச் சார்ந்தவர்கள் தான். மலையகக் கல்வியை மலையகக் கல்வியுடன் ஒப்பிடும் போது கடந்த இரு தசாப்தங்களில் நாம் பெருமைப்பட்டுக்கொள்ளக் கூடிய பல நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இந்த காலகட்டத்தில் தேசிய கல்வி முறைமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுடன் ஒப்பிடும் போது மலையகக் கல்விக்கும் தேசிய கல்விக்கும் இடையிலான அகன்ற இடைவெளி எவ்வளவு தூரம் குறைக்கப்பட்டுள்ளது என்பது ஆய்வுக்குரியது. தேசிய கல்வி முறைமையின் ஓர் அங்கமாக இருப்பதால் அதன் குறைபாடுகள் மலையகக் கல்வியிலும் காணப்படுகின்றன. உதாரணமாக ஆசிரியர் பரம்பலில் தேசிய ரீதியாகக் காணப்படும் அமைப்பு ரீதியான சமநிலையின்மை (STRUCTURAL IMBALANCE) அதாவது சில குறிப்பிட்ட பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை மலையகத்திலும் காணப்படுகின்றது.

அதேநேரத்தில் மலையகக் கல்வி தமிழ் மொழிக் கல்வியின் ஓர் அங்கமாக விளங்குவதால் அதில் காணப்படுகின்ற மொத்த ஆசிரியர் சமநிலையின்மை (OVERALL INBALANCE) மலையகக் கல்வியிலும் காணப்படுகிறது. ஊதாரணமாக உலக வங்கியின் அறிக்கை (1996)யின் படி தேசிய கல்விமுறையில் 14000 ஆசிரியர்கள் மிகையாகக் காணப்படும் போது தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் 10,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன! மலையகப் பாடசாலைகளிலும் ஆசிரிய வெற்றிடங்கள மிகையாகக் காணப்படவே செய்கின்றன. எனவே கல்விப் பிரச்சினைகள், குறைபாடுகள் மலையகப் பாடசாலைகளில் மட்டுமே காணப்படுகின்றன எனக் கூறுவதற்கில்லை.

ஆனால், இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டிய மிக முக்கியமான விடயமென்னவெனில் தேசிய கல்வி முறைமையிலும் தமிழ்மொழிமூலக் கல்வி முறைமையினும் காணப்படுகின்ற கல்விப் பிரச்சினைகளும் குறைபாடுகளும் மலையகக் கல்வி முறைமையிலும் காணப்படுகின்ற அதேவேளையில் இவற்றில் காணப்படாத மலையகக் கல்விக்கு மட்டுமே உரித்தான கல்விப்பிரச்சினைகளும், குறைபாடுகளும் மலையகக் கல்வி முறைமையில் காணப்படுகின்றன என்பதாகும். இவ்விடயத்தைச் சரியான முறையில் விளங்கிக் கொள்வதன் மூலம் மட்டுமே எதிர்காலத்தில் மலையகக் கல்வியை வினைத்திறனும் விளைதிறனும் மிக்க வகையில் திசைமுகப்படுத்த முடியும்.

முலையகக் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டமிடப்பட்ட காத்திரமான முயற்சிகள் 1980களின் மத்திய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு முன்னோடியாக பல முகவரகங்கள் மேற்கொண்ட ஆய்வுகளின்படி பின்வரும் கல்விப்பிரச்சினைகள் இனங்காணப்பட்டன:

1. பலவீனமான உட்கட்டமைப்பு
2. பெரும்பாலான ஆசிரியர்கள் தேர்ச்சி குறைந்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆசிரியர்கள் மத்தியில் அர்ப்பணிப்பு, ஊக்கல் குறைவு
4. இடைநிலைக் கல்விக்கான வசதிகளின்மை
5. உயர்ந்த இடைவிலகல் வீதம்
6. குறைந்த எழுத்தறிவு வீதம்
7. பிள்ளைகளின் போஷாக்கின்மை
8. உபகரணங்கள், தளபாடங்கள், இடப்பரப்பு பற்றாக்குறை
9. விரிவாக்கத்துக்குதவியாக காணிகள் இன்மை
10. மேலதிகமான வாசிப்பு துணைநூல்கள் இன்மை
11. அதிபர்களின் தேர்ச்சி குறைவு
12. போதிய தமிழ் கல்வி அதிகாரிகள் இன்மை
13. பாடசாலை மேற்பார்வை செயற்பாடுகளில் குறைபாடு
14. பெற்றாரின் ஈடுபாடு குறைவு
15. பாடசாலை- சமூக உறவுகளில் குறைபாடு

முன்னர் குறிப்பிட்டவாறு இப்பிரச்சினைகள் மலையகக் கல்விக்கு மாத்திரம் உரித்தன்று. ஆனால், இவற்றில் பல மலையகக் கல்வியில் மிகவும் முனைப்பாகக் காணப்படுகின்றன. அவை தீர்க்கப்படாத வரையில் மலையகக் கல்வியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. இப்பிரச்சினைகள் அனைத்தையும் பற்றி இங்கு விவாதிக்க முடியாதெனினும் ஒரு சிலவற்றை விளங்கிக் கொள்வது மிகவும் முக்கியமானது.

மாணவர்கள் ஆசிரியர் விகிதம் தேசிய மட்டத்தில் 22:1 ஆகும். இது மிகவும் பாராட்டக்கூடியதொரு அடைவு மட்டமாகும். மிகவும் விருத்தி அடைந்த நாடுகளில் கூட இவ்விகிதம் 25:1 ஆக் உள்ளது. ஆனால், மலையக்தில் மாணவர் ஆசிரியர் விகிதம் அண்ணளவாக 40:1 ஆகும். ஆதாவது மலையகத்தில் மாணவர் ஆசிரியர் விகிதத்தை தேசிய மட்டத்துக்கு உயர்த்த வேண்மெனில் தற்போது மலையகத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களின் தொகையை இரட்டிப்பாக்க வேண்டும். ஆசிரியர் பற்றாக்குறை ஒருபுறமிருக்க மறுபுறத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களின் தொழில் நிலைத்தேர்ச்சி திருப்திகரமாக இல்லை என்பது பொதுவான கருத்து. ஆசிரியர்களின் தொழில்நிலைத் தேர்ச்சி என்பது பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.

1. தொழில் நுழைவுநிலையில் அவர்களது கல்வித் தகைமை
2. ஆசிரியர்களின் தொழிற்பயிற்சிக்கான நிறுவனங்களில் வழங்கப்படும் பயிற்சி நெறிகளின் தரம்
3. அந்நிலையங்களில் காணப்படும் வசதிகள்
4. அந்நிலையங்களில் பணிபுரியும் வள நபர்களின் தகைமையும் அர்ப்பணிப்பும், திறமையும்.

தொடர்ச்சியான வாண்மை விருத்திக்கான வாய்ப்புகள்

மலையகத்தில் மிக அண்மைக்காலம் வரை க.பொ.த. சாதாரண தர தகைமை கொண்டவர்களே ஆசிரியர்களாக நியமனம் பெற்றார்கள். இவர்களில் பெரும்பாலோர் தேசிய கல்வி நிறுவகத்தின் தொலைக்கல்வி மூலமான ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாக உள்ளனர். பட்டதாரி ஆசிரியர்களின் தொகை மிகவும் குறைவாக உள்ளது. சிற்சில பாடங்களில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. ஆழகியல் தொழில்நுட்பம் முதலிய பாடங்களில் தொழில் பயிற்சி பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அரிதாகக் காணப்படுகிறது.

ஆசிரியர்களுக்கான தொழில்சார் உதவிகள் வழங்குவதில் முதன்மை ஆசிரியர்கள் மிகவும் முக்கியபங்கு வகிக்கின்றனர். மலையகக் கல்வி வலயங்களில் முதன்மை ஆசிரியர்களுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது. ஊவா மாகாணத்தில் மிக அண்மைக்காலம் வரை தமிழ் மொழி மூலமாகப் பணியாற்றக்கூய முதன்மை ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. மறுபுறத்தில் மலையகத்தில் நியமிக்கப்பட்டுள்ள முதன்மை ஆசிரியர்களில் பலர் எந்தளவுக்கு ஆசிரியர்களுக்கு வழிகாட்டக்கூடியவர்கள் என்பது தொடர்பான சந்தேகமும் உள்ளது. அத்துடன் இந்த முதன்மை ஆசிரியர்களுக்கு தமது கடமையை செவ்வனே மேற்கொள்ள எந்தளவுக்கு நிர்வாக அதிகாரங்களும், தொழில்சார் பயிற்சியும், ஊக்களும் வழங்கப்படுகின்றன என்பதும் ஆய்வுக்குரிய விடயமாகும்.

மலையக ஆசிரியர்கள் மாத்திரமல்லாது முழு நாட்டிலும் பணிபுரிகின்ற தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்கும் வாண்மை விருத்தி மற்றும் உயர்கல்விக்கான வாய்ப்புகள் எந்தளவுக்கு உள்ளன என்பது தமிழ்க்கல்வியியலாளர்களது கவனத்தை ஈர்க்கவேண்டிய விடயமாகும். மிக அண்மைக்காலம் வரை தமிழ் மொழிமூலமாக கல்வியியலில் முதுமாணி (M.Ed, M.A) பட்டங்களைப் பெறுவதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தையே நாடவேண்டிய நிலைமை இருந்தது. திறந்த பல்கலைக்கழகத்தில் இக்கற்கை நெறிகளை இன்று தமிழில் பயில்வதற்கு முடிந்தபோதும் வள நபர்களின் பற்றாக்குறை காரணமாக ஒரு சில மாணவர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்படுகின்றனர். தேசிய கல்வி நிறுவகத்தில் முதன் முறையாக தமிழில் ஏற்படுத்தப்பட்ட கல்வி முதுமாணி கற்கைநெறிக்கு ஒரே முறையுடன் வெற்றிகரமாக மூடுவிழா நடாத்தப்பட்டுவிட்டது.

மலையகப்பாடசாலைகளிலும் உயர்கல்வி நிலையங்களும் கல்வி முதுமாணி பட்டம் பெற்றுள்ளவர்களை விரல்விட்டு எண்ணிவிடமுடியும்.

பாடசாலைகளில் கல்விசார் செயற்பாடுகளையும் நிர்வாகப் பணிகளையும் மேற்பார்வை செய்வது நிறுவன விருத்திக்கு அடிப்படையானதொரு விடயமாகும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மேற்பார்வைப் பணிகளை பெரும்பாலும் சிங்கள கல்வி அதிகாரிகளே மேற்கொள்ளும் நிலை காணப்படுகிறது. இதற்கு காரணம் தமிழ் கல்வி அதிகாரிகளின் பற்றாக்குறைவாகும். 1997ல் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் மலையக கல்வி வலயங்களில் தமிழ் கல்வி நிர்வாக அதிகாரிகளுக்கு 118 வெற்றிடங்கள் இருந்த போதும் 9 அதிகாரிகளே உள்ளனர் என அறியப்பட்டது. பின்னர் சிலர் போட்டிப்பரீட்சை அடிப்படையில் நியமிக்கப்பட்டபோதும் அவர்களிலும் சிலர் நீதிமன்றத் தீர்ப்பு காரணமாக தமது பதவிகளை இழந்தனர். இவர்களுக்கு எவ்வித நிவாரணமும் இதுவரை வழங்கப்படவில்லை. இந்நிலையில் மலையகப் பாடசாலைகளில் கிரமமாக மேற்பார்வைகளை மேற்கொள்ளவும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு கண்டு கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பண்புத்தரத்தை மேம்படுத்தவும் வாய்ப்புகள் குறைவாகும். கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தரத்தைச் சேர்ந்த தமிழ் அதிகாரிகள் மலையகத்தில் ஒருவருமே இல்லை. அவ்வாறாயின் மலையக கல்வி வலயங்களில் கல்வி நிர்வாகப் பொறுப்பை மலையகத்தவர் பெற்றுக்கொள்ளும் காலம் அண்மையில் வரப்போவதுமில்லை. அது ஒருபுறமிருக்க இப்பொறுப்பாண்மையை இவர்களுக்கு வழங்கும் அரசியல் மனநிலை உள்ளதா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

அண்மைக்கால கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள்

1980களின் மையப்பகுதியில் மலையகக் கல்வி விருத்திக்கான சாத்திரமான செயற்பாடுகள் ஆரம்பமாகின. இவற்றுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்ட பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தித் திட்டம் (PSEDP) மிகவும் முக்கியமானது. இச் செயற்திட்டத்துக்கு சுவீடிஷ் சீடா (SIDA) நிறுவனம் நிதி உதவியை வழங்கியது. 'பெருந்தோட்டப் பாடசாலைகளை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் அபிவிருத்தி செய்து தேசிய கல்வி முறைமையில் சமத்துவமாக ஒன்றிணைப்பதே' இச் செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்தது. இந்நோக்கத்தை அடைவதற்கு இச்செயற்றிட்டம் பின்வரும் மூன்று கட்டங்களில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டது. முதலாவது கட்டம் (1986-90) இரண்டாவது கட்டம் (1990 - 94) மூன்றாவது கட்டம் (1994-98).

இச்செயற்திட்டம் பின்வரும் பத்து துணைச் செயற் திட்டங்களை கொண்டிருந்தது:

1. ஆரம்பக் கல்வியில் தரவிருத்தி
2. ஆசிரியர் நிரம்பல்
3. சேர்வு வீதம், வரவுவீதம் ஆகியவற்றை அதிகரித்தல்
4. இடைநிலைக்கல்விக்கான வாய்ப்புகளை விரிவாக்குதல்
5. உட்கட்டமைப்பு விருத்தி
6. உடல்நலமும் சுகாதாரமும்
7. பாடசாலை சுகாதாரமும்
8. முறைசாரா கல்வி விருத்தி
9. செயற்றிட்ட லாகாவினை மதிப்பிடல்
10. ஒழுங்கமைத்தல், முகாமைத்துவம், கண்காணித்தல்

PSEDP செயற்றிட்டம் 1998 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்தது. இச் செயற் திட்டத்துக்காக சீடா நிறுவனம் 1055.36 மில்லியன் ரூபாய்களை செலவு செய்தது. 808 மலையகப் பாடசாலைகளில 700 பாடசாலைகளில் தரவிருத்தியும் 436 பாடசாலைகளில் உட்கட்டமைப்பு விருத்தியும் மேற்கொள்ளப்பட்டன.

1986ல் ஆரம்பிக்கப்பட்ட இன்னுமொரு அபிவிருத்திச் செயற் திட்டம் ஸ்ரீபாத கல்வியியல் கல்வியியல் கல்லூரிச் செயற்றிட்டமாகும். இதற்கு ஜெர்மனிய புவுணு நிறுவனம் நிதியுதவி செய்தது. இச்செயற்றிட்டம் நான்கு கட்டங்களைக் கொண்டிருந்தது. ஆரம்ப அபிவிருத்திக்கட்டம் (1986 - 91) செயற்படு கட்டம் (1992 - 94) முடிவுறுகட்டம் (1995 - 97) பின் தொடர் கட்டம் (1998 - 99). இந்நான்கு கட்டங்களுக்கும் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 644 மில்லியன் ரூபாய்களை GTZ நிறுவனம் வழங்கியது.

1. ஸ்ரீபாத கல்வியை நிர்மானித்தல்.
2. இக்கல்லூரிக்குத் தேவையான உபகரணங்கள் தளபாடங்களைப் பொருத்துதல்
3. கல்லூரிக்கு அண்மையில் 81 பாடசாலைகளை விருத்தி செய்தல்
4. வளநிலையங்களை ஸ்தாபித்தல்
5. க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு புத்தூக்க வகுப்புகளை நடாத்துதல்.
6. ஆரம்ப பாடசாலைகளுக்கான ஒரு வெளிக்கள நிலையத்தையும் ஆலோசனை சேவையையும் நிறுவுதல்.

இந்த இரு செயற்றிட்டங்களும் மலையகக் கல்வி விருத்தியில் மிகவும் முக்கியமானவை. ஊயரிய மனிதாபிமானத்துடன் வழங்கப்பட்ட இந்த உதவிகளுக்காக சுவீடிஷ், ஜெர்மானிய மக்களுக்கு மலையக மக்களும் அவர்களது சந்ததியினரும் நன்றிக்கடன் பட்டுள்ளனர். எனினும் இந்த செயற்றிட்டங்கள் எந்தளவுக்கு வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் மேற்கொள்ளப்பட்டன என்பது பற்றிய ஓர் கல்விசார் மதிப்பீடு வெளிவாரி முகவர்களால் நடாத்தப்பட வேண்டும். அவ்வாய்வு முடிவுகள் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை சீரிய முறையில் திசைமுகப்படுத்துவதற்கு பெருந்துணையாக இருக்கும்.

மலையகக் கல்வியின் எதிர்காலம்

1970களுக்குப் பின்னர் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மலையகக் கல்வி விருத்தியில் ஒப்பீட்டளவில் கரிசனை காட்டி வந்துள்ளன. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அவற்றுள் முக்கியமானது மலையக மக்கள் 1940 களில் இழந்த அரசியல் உரிமைகளை 1970களிலிருந்து படிப்படியாகப் பெற்றுக் கொண்டமையாகும். முலையக மக்களின் 'வாக்கு வங்கி' பெரும்பான்மையின அரசியல்வாதிகளுக்கு காலத்துக்குக் காலம் தேவைப்படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் கூட மலையக மக்கள் பால் அரசியல்வாதிகள் கரிசனை கொள்வதற்கு ஒரு துணைக் காரணியாகவிருக்கலாம். பிரச்சினைகள், முரண்பாடுகள் கூர்மையடையும் போது அது ரெம்போராட்டமாக வெடித்துக்கிளம்புவது வரலாற்றின் நியதியாகும்.

இன்றைய சாதகமான அரசியல் சூழ்நிலையை மலையகக் கல்வி மேம்பாட்டுக்கு ஏற்புடையதாக மாற்றிக்கொள்வதில் மலையகத் தலைமைகளும் மலையகக் கல்வியில் அக்கறை கொண்டோரும் தொலைநோக்குடன் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். இதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய விடயம் மலையகக் கல்வியின் எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தந்திரோபாய திட்டத்தை (STRATEGIC PLAN) வடிவமைப்பதாகும். இத்திட்டத்தில் குறுங்கால, மத்தியகால, நீண்டகாலத் திட்டங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். இத்தகைய திட்டம் ஒன்றினை உருவாக்க வேண்டுமானால் மலையகக் கல்வி தொடர்பாக ஒரு தொலைநோக்கினை (VISION) உருவாக்கிக் கொள்வதும் அவசியமாகும். தோலைநோக்கு இல்லாத செயற்பாடுகள் இலக்கு இல்லாத பயணம் போன்றதே.

இவ்வாறான ஒரு முழுமையான கல்வி அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்குவதற்கு முதற்படி தற்போதைய மலையகக் கல்வி நிலையை பகுப்பாய்வு செய்வதாகும். முலையகக் கல்வி பற்றிய பூரணமான தகவல்கள் இல்லை. இத்தகவல்களை ஒன்றுதிரட்ட வேண்டும். உதாரணமாக மலையகத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களில் எத்தனை பேர் மலையகத்தவர்கள், அவர்களது கல்வித் தகைமைகள் யாவை, அவர்களது வாண்மை விருத்தித் தேவைகள் யாவை போன்ற விபரங்கள் திரட்டப்படவேண்டும். அதேபோல மாணவர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் போன்றோரின் பூரணமான தகவல்கள் திரட்டப்படவேண்டும். ஆய்வு பூர்வமான தகவல்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படாத எந்த திட்டமும் தனது குறிக்கோள்களை அடையமுடியாது.

மலையகம் பொதுவாக கல்வியில் பின்தங்கி இருந்தாலும் மலையகத்துக்குள்ளேயே வேறுபட்ட நிலைமைகள் இன்று காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் மத்திய மலைநாட்டில் காணப்படும் கல்வி அபிவிருத்தி மலைநாட்டின் ஓரப்பகுதிகளில் காணப்படவில்லை. கடந்த இரு தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட கல்விச் செயற்பாடுகள் கண்டி, நுவரெலியா முதலிய மாவட்டங்களையே முனைப்பாகக் கொண்டிருந்தன. இம்மாவட்டங்களில் உட்கட்டமைப்பு தேவைகள் கணிசமான அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே இங்கு பண்புத்தரவிருத்தி நோக்கிய செயற்பாடுகளுக்கு முதன்மை அளிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரத்தில் ஏனைய பகுதிகளில் உட்கட்டமைப்பு தேவைகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

எந்தவொரு கல்வி முறைமையிலும் மாணவர்களுக்கு அடுத்து மிக முக்கியமான பகுதியினர் ஆசிரியர்களே ஆவர். இந்நாட்டில் மிகவும் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவது மலையகத்தில்தான். இப்போது பணிபுரிகின்ற ஆசிரியர்கள் தொகையை இரட்டிப்பாக்கினால்தான் மலையகத்தில் மாணவர் ஆசிரியர் விகிதத்தை தேசிய விகிதாசாரத்துக்கு சமமாக்க முடியும். இன்று க.பொ.த. உயர்தரத்தில் சித்தியெய்திய மாணவர்கள் கணிசமாக உள்ளனர். இவர்களைக் கொண்டு ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும். அதே நேரத்தில் மலையக ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு முதற்படியாக தகைமையும் அர்ப்பணிப்பும் கொண்ட முதன்மை ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களைக் கொண்டு மலையக ஆசிரியர்களுக்கு தொழில்சார் உதவிகளை வழங்குவதற்கு ஆவண செய்தல் வேண்டும்.

ஆசிரியர் வாண்மை விருத்தியில் தொடருறு கல்வி (CONTINUING EDUCATION) மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்கல்வியை வழங்குவதில் பல்கலைக்கழகங்களும், தேசிய கல்வி நிறுவகமும் முக்கியமான நிறுவனங்களாகும். இவற்றில் கல்வியில் இளமாணி, முதுமாணி (BEd, MEd) பட்ட கற்கை நெறிகளில் பங்குகொள்ளும் மலையக ஆசிரியர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையினரே. இந்நெறிகளில் நியாயமான அளவு மலையக ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அதேபோல மலையக பாடசாலைகளில் பொருத்தமான அதிபர்களை நியமித்தல், அவர்களுக்குத் தேவையான முகாமைத்துவ பயிற்சிகளை வழங்குதல், அவர்களது நிர்வாக செயற்பாடுகளுக்கு உதவி செய்தல் ஆகியவையும் முக்கியமானவை. மலையக கல்வியை நிர்வகிப்பதில் மலையகத்தவர் பங்குகொள்ள வேண்டுமெனில் போதுமான அளவுக்கு கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். அத்துடன் அவர்களுக்குக் கல்வி முகாமைத்துவத் துறையில் பயிற்சி அளிக்கப்படவும் வேண்டும்.

இவ்வாறான அடிப்படையான விடயங்களில் கவனம் செலுத்தாமல் மலையகக் கல்வியை விருத்தி செய்துவிட முடியாது. இப்போது தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் பின்பற்றப்படும் கல்விக் கொள்கைகள் மலையகத்தில் காணப்படுகின்ற விசேட பிரச்சினைகளை கவனத்திற்கொண்டிருக்கவில்லை. பொருத்தமான, உடன்பாடான கொள்கைத் தெரிவுகளின்றி ஒரு பின்தங்கிய மக்கள் கூட்டத்தின் கல்வியை முன்னேற்றிவிட முடியாது. மலையகக் கல்வி பின்தங்கியுள்ளது என்பதை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் தேசிய கல்வி ஆணைக்குழு (1992) ஏனைய பிரதேசங்களில் காணப்படுகின்ற பின்தங்கலையும், மலையக பின்தங்கலையும் ஒரே கூடைக்குள் போட முயல்கிறது. இது மிகவும் துரதிர்ஷ்டமானது. ஏனைய பிரதேசங்களில் காணப்படுகின்ற கல்வி பின்தங்கல் நிர்வாகம் சார்ந்தது. ஆனால், மலையகத்தின் பின்தங்கல் பின்பற்றப்பட்ட பாரபட்சமான கல்விக் கொள்கைகளின் நேரடி விளைவாகும். பின்தங்கியிருத்தல் பொதுவாக இருந்த போதும் அதற்கான காரணங்கள் வேறுபட்டவை. எனவே வேறுபட்ட நோய்களுக்கு ஒரே மருந்தை கொடுத்து குணமாக்க முயல்தல் பேதமையாகும். மலையகக் கல்வியை மேம்படுத்த வேண்டுமெனில் குறிப்பிட்ட காலத்துக்கு உடன்பாடான பாரபட்சம் **(POSITIVE DISCRIMINATION)** காட்டும் கல்விக் கொள்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். இந்தியா உட்பட பல நாடுகளில் பின்தங்கிய பிரதேசங்களையும் இனக்குழுக்களையும் தேசிய மட்டத்துக்கு உயர்த்துவதற்காக இவ்வாறான கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன. இவ்வாறான ஒரு கொள்கையை அரசாங்கம் பின்பற்ற வேண்டுமெனில் அதற்காக மலையகத் தலைமைகள் ஒன்றுபட்டு மிகவும் கடினமாக உழைக்க வேண்டும். உதாரணமாக கடந்த நான்கு தசாப்தங்களில் பல்கலைக்கழகங்களில் மலையக மாணவர்களின் பங்குபற்றல் ஒரு வீதத்தை விட குறைவானதாகும். பட்டதாரிகளின் எண்ணிக்கைக்கும் ஒரு சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளது. உடன்பாடான கொள்கையைப் பின்பற்றாமல் பல்கலைக்கழகங்களில் மலையக மாணவர்களின் சேர்வு விகிதத்தை கூட்ட முடியாது. உண்மையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு பின்பற்றும் தகவல் கொள்கையின் காரணமாக மலையகத்தைச் சார்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையைத் துல்லியமாகப் பெற முடியாதுள்ளது.

மலையகக் கல்விப் பிரச்சினைகளை சரியான முறையில் சரியான வடிவதில் சரியான இடங்களில் நாம் முன்வைக்க வேண்டுமெனில் அதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அவற்றுள் முக்கியமானது "மலையகக் கல்விச் செயலகம்" (PLANTATION EDUCATION SECRETARIAT) உருவாக்கப்பட வேண்டும். கல்வி ஆய்வு, கொள்கை உருவாக்கம், நெருக்குதல்களை ஏற்படுத்தல் (LOBBYING) முதலியவற்றை முனைப்பாகக் கொண்டு இச்செயலகம் செயற்படுதல் வேண்டும்.

இச் செயலகத்தின் சார்பில் வருடாந்த மலையகக் கல்வி மாநாடு (ANNUAL EDUCATION CONFERENCE) நடத்தப்பட வேண்டும். மலையகக் கல்வி ஆர்வலர்கள் தமக்குள் கொண்டிருக்கக்கூடிய வேறுபாடுகளும், சித்தாந்த முரண்பாடுகளும் இந்த மாநாட்டில், அவர்கள் பங்கு கொள்வதற்கு தடைக்கற்களாக இருக்கக் கூடாது. மலையகக் கல்வியில் ஆர்வம் கொண்ட சகலரும் இம்மாநாட்டில் பங்குகொண்டு தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

முடிவுரை

மேற்படி முன்மொழிவுகளை மேலோட்டமாகப் பார்க்கும்போது அசாத்தியமானவைகளாகத் தோன்றலாம். ஆனால், இவற்றுக்கு செயலுருவம் கொடுக்காமல் மலையகக் கல்வி முன்னேற்றத்தை எண்ணிப்பார்க்க முடியாது. மலையகக் கல்வி மேம்பாடு இரண்டு விடயங்களில் தங்கியுள்ளது. ஒன்று அரசாங்கத்தின் அரசியல் உறுதிப்பாடு (Political will) அடுத்தது அத்தகைய உறுதிப்பாட்டினை ஒன்றுபட்டு தொடர்ச்சியாக மேற்கொள்ளும் முயறசிகள். இவை இரண்டும் இருக்குமாயின் ஒரு பத்தாண்டு காலத்துக்குள் மலையகக் கல்வியை தேசிய மட்டத்துக்கு கொண்டு வர முடியாவிட்டாலும் ஓரளவுக்கு முன்னேற்றிவிட முடியும்.

அரசியல் தலைமைத்துவம் மாத்திரம் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்திவிட முடியாது. அதற்கு சாதகமாக ஒரு கல்வித் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புதல் மிகவும் முக்கியமானது. மலையகத்தில் கட்சி சார்பற்ற ஒரு கல்வித் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவது வரலாற்றின் தேவையாகும். ஒரு சிலர்தான் உள்ளனர் என்ற போதிலும் இன்று பல்வேறு துறைகளிலும் மலையகத்தைச் சேர்ந்தோர் பிரகாசிக்காமலில்லை. அவர்களது உதவியுடனும் பங்களிப்புடனும் மலையகத்தில் ஒரு கல்வித் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்ப முடியும். அவ்வாறான ஒரு தலைமைத்துவத்தை உருவாக்க மலையகக் கல்வியில் ஆர்வமுள்ள சகலரும் தமது அரசியல் வேறுபாடுகளையும் சித்தாந்த முரண்பாடுகளையும் ஓரளவு புறந்தள்ளிவிட்டு நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் முயற்சி செய்தல் வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

இக்கட்டுரையின் ஆசிரியர் மஹரகம தேசிய கல்வி நிறுவன தமிழ்த்துறை பணிப்பாளராவார். தவலாக்கலையை பிறப்பிடமாக் கொண்ட இவர் மலையகத்தின் முதல் வெளிவாரி பட்டதாரியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

CENTRAL TRADING

NO. 34A, SIDE STREET
HATTON
Tel: 051-23034, 051-23584

COMPAQ COMPUTER EDUCATION

NO. 167/1A, DIMBULLA ROAD,
HATTON,
Tel / Fax : 051-22740

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைக்கப்பட்ட விதைகள்

விதைக்கப்பட்டவர்கள்
என்று தான்
வீராப்பாய்
மண்ணில் விழுந்தோம்
புதைக்கப்பட்டு விட்டதை
பின்னர் தான் உணர்ந்தோம்

வானத்தின் நீலங்களும்
வைகரை மேகங்களும்
மின்னலின் ரேகைகளும்
எங்கள் நிலத்தில்
விழாதவாறு விரட்டியடித்தது
புயற்காற்று

விதைக்கப்பட்டவர்கள்
என்று தான்
வீராப்பாய்
மண்ணில் விழுந்தோம்
புதைக்கப்பட்டு விட்டதை
பின்னர் தான் உணர்ந்தோம்

எம் நிலங்களை
துளிர விடாமல்
தளிர்களை
நிமிர விடாமல்
எங்களை வளர விடாமல்
தடை போட்டது தரை

அறுவடையாகும்
அவசரத்தில்
புதைக்கப்பட்டது புரியாமல்
புலகாங்கிதம் அடைந்தோம்
ஜீவ நீரின் ருசி - எங்கள்
நாவை நனைக்கும்
நாள் பார்த்து
உணர்விழந்தது - எங்கள்
உடல் உலந்தது

விதைக்கப்பட்டவர்கள்
என்று தான்
வீராப்பாய்
மண்ணில் விழுந்தோம்
புதைக்கப்பட்டு விட்டதை
பின்னர் தான் உணர்ந்தோம்

மரமாகும் அவசரத்தில்
புதைக்கப்பட்டது
புரியாமல்
விதைக்கப்பட்டோம்
என்றிருந்தோம்
வின்பார்க்க
நாள் பார்த்தோம்
நிழல் கொடுக்க
ஆள் பார்த்தோம்

விதைக்கப்பட்டவர்கள்
என்று தான்
வீராப்பாய்
மண்ணில் விழுந்தோம்
புதைக்கப்பட்டு விட்டதை
பின்னர் தான் உணர்ந்தோம்

விதைக்கப்பட்டவர்களாய்
நாம் புதைக்கப்பட்டது
சகாராவில் அல்ல - இந்த
மலைகளில்
சிலரின்
அதிகார விலைகளில்
அகங்கார கலைகளில்
அடக்குமுறை உலைகளில்

விதைக்கப்பட்டவர்கள்
என்று தான்
வீராப்பாய்
மண்ணில் விழுந்தோம்
புதைக்கப்பட்டு விட்டதை
பின்னர் தான் உணர்ந்தோம்

புதைக்கப்பட்டவர்கள் நாம்
விதைக்கப்பட்டவர்களாய்
நின்றிந்த நாள் தாண்டி
பூமி பந்தை
வெட்டி முளைத்து
மண்ணை பிளக்கும்
மரமாவோம்
விண்ணை உரசும்
விருட்சமாவோம்

விதைக்கப்பட்டவர்கள்
என்று தான்
வீராப்பாய்
மண்ணில் விழுந்தோம்
புதைக்கப்பட்டு விட்டதை
பின்னர் தான் உணர்ந்தோம்

நிலங்களுக்கு
இரைத்த நீரை
களைகள் பருகுவதா?
இலைகள் கருகுவதா?
எதிர்கால
கிளைகள் கண்ணீர் விடுவதா?

இந்த....
பத்து இலட்சம் வித்துக்களும்
சொத்தை என
நினைத்தீரா?
வெறும் தூறும்பென
மதித்தீரா?
ஜடமென
வெறுத்தீரா?

விதைக்கப்பட்டவர்கள்
என்று தான்
வீராப்பாய்
மண்ணில் விழுந்தோம்
புதைக்கப்பட்டு விட்டதை
பின்னர் தான் உணர்ந்தோம்

புதைக்கப்பட்ட நிலங்கள்
வெடிக்கும்
தடைகள் பிளக்கும்
வித்துக்கள்
காலம் மீறி கிடக்கும்
புவியெல்லாம்
புதுப்புரட்சி நடக்கும்

புதைக்கப்பட்ட நாம்
விதைக்கப்பட்டவர்களாய்
வெளி வருவோம்
இருளுக்கு ஒளியாவோம்
உயிருள்ள மொழியாவோம்
விஞ்ஞான விழியாவோம்
நல் நில வழியாவோம்
புதைக்கப்பட்டவர்களல்ல
விதைக்கப்பட்டவர்கள் - என
புரியவைப்போம் - உலகையே
பணியவைப்போம்
காலம் உள்ளவரை
கதைக்கப்பட்டவர்களாய்
உலாவருவோம்.

மை. பன்னீர்
சென் லெனார்ட்ஸ் பசார்
ஆள்கரனோயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

METRO ELECTRICALS

No. 29, Main Street,
Hatton.
Tel: 051 - 23032, 051-22591

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

BARATH ENTERPRISES (PVT) LTD,

No: 77, 79, Wolfendhal Street,
Colombo - 13
Tel : 348180, 437591

MARUTHI AGENCIES

No: 83, Wolfendhal Street,
Colombo - 13
Tel : 473693

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

ROYAL

(Specialized in printed fabrics)
No : 95, 3rd Cross Street,
Colombo - 11
Tel : 334153

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தலித்துகள், சில புரிதல்கள், விடுதலை நேசிகளின் கடமைகள்

நோர்வேயிலிருந்து என். சரவணன்

இன்றைய முதலாளித்துவ சமூக உருவாக்கத்தின் நவவடிவங்கள் (உலகக் கிராமங்கள் அல்லது Information Highway போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தலாம்) எத்தனைதான் அரசியல், பொருளியல், பண்பாட்டு ரீதியான மாற்றங்களைக் ஏற்படுத்திக் கொண்டுவருகின்ற போதும் உலகின் இனக்குழுமங்களுக்கு இடையிலான உறவுகள், நெருக்கங்கள் (அல்லது நலன்கள்) என்பன மேலும் துருவமயமாகிக்கொண்டு போகும் நிலைமையும், அதிகாரத்துவம், அசமத்துவம் என்பன மேலும் இறுகும் நிலைமையும் அதிகரித்து வரும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மலையகத் தமிழர்களில், அடக்கப்படும் சாதிய சமூகத்தின் எண்ணிக்கை ரீதியாக அதிகளவில் கொண்டிருக்கின்ற அதேநேரம் அவர் தம்மை ஒரு தேசமாக, மலையகத் தமிழ்த் தேசமாக தம்மை உருவாக்கிக் கொண்டுமுள்ளார்கள்.

வல்லாதிக்க சக்திகள் இந்த யுகத்தை தகவல் தொழில்நுட்ப யுகமாக பிரகடனப்படுத்துகின்றன. இதன் அடிப்படை நோக்கமே உலகை தனது நலனுக்காக, ஆதிக்க சித்தாந்த மயப்படுத்துவதுதான். புதிய உலக ஒழுங்குக்கு ஏனைய குறைவிருத்தி தேசங்களையும் தகவமைக்குமாறு நிர்ப்பந்திக்கின்றன. ஆதிக்க சித்தாந்த கருத்தேற்றம் செய்து உலகை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயல்கின்றன. இதற்காக, அவை திட்டமிட்டே பல்வேறு திட்டங்களையும் நிகழ்ச்சிநிரல்களையும் பன்முக தளங்களில் மிகவும் நுட்பத்துடன் செயற்பட்டு வருவதை, அதன் விளைவுகளை நாம் உணர்ந்துள்ளோம் என்றால் அது மிகையில்லை.

எனினும், இந்த நிலையிலிருந்து தான் ஆதிக்க உலக ஒழுங்குமயப்படுவதிலிருந்து அடக்கப்படும் தேசங்களாக உள்ள நாம் அவர்களின் நிகழ்ச்சி நிரலிலிருந்து தொடங்காது அவை குறித்த தேடல், புரிதல் நிலைகளிலிருந்து எமக்கேயுரிய நிகழ்ச்சிநிரலை நாமே நமக்கேயுரிய நமது தேவைகளின் அடிப்படையிலிருந்து தயாரித்து ஆக வேண்டியுள்ளது. தகவல் தொழில்நுட்ப யுகம் என அவர்கள் முன்வைத்துள்ள அவர்களது திட்டத்தில் நமக்கு ஏதும் உரிமைகள் உண்டா இல்லையா என ஆராய்வதில் நமது காலத்தையும், வளங்களையும் செலவிடுவது கூட அவர்களது பொறிக்குள் நாம் காலைக் கொண்டுபோய் வைப்பதாகவே இருக்கும். எனவே தான் இந்த கருத்தாக்கங்களை நிராகரிப்போம். எமது சொந்தத் தேவைகளிலிருந்தும், நலன்களிலிருந்தும் இந்நிகழ்ச்சி நிரல்கள் அமையப்பெறுவதும் எமது பன்முகத் தன்மைகளையும் மேலும் வளப்படுத்துவதாக பலப்படுத்துவதாக அவை அமைவதும் மிகவும் இன்றியமையாததாகும்.

ஏலவே எமது நிகழ்ச்சி நிரலையும், திசைவழியையும் தீர்மானிக்கின்ற பாத்திரத்தை எமது தேசத்தினதும் சமூகங்களினதும் ஆளுங்குழுமங்கள் உலக வல்லாதிக்க சக்திகளுக்கு தாரைவார்த்து கொடுத்தாகிவிட்டன. எனவே இன்று நமக்கு எமது இறைமை, என்று கூறுவதற்கு ஒன்றும் இல்லை என்றாகிவிட்டது. விரும்பியோ விரும்பாமலோ எமது இறைமை எமது கைகளில் இல்லை என்ற யதார்த்தம் எம்மனைவரையுமே அழுத்துகின்றது. எமது இறைமை வெளி வல்லாதிக்க சக்திகளிடம் இருக்கின்றது என்பதை பல்வேறு நேரங்களில் உணர்ந்தாலும் அது அநேகமாக ஒரு சூக்குமத் தன்மையையும் கொண்டுள்ளது. இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக, எமது இறைமை எமக்கு வெளியில் இருந்து கட்டுப்படுத்தப்படுவதாக அமைகின்றது. எமது இறைமை வெளியாரால் தீர்மானிக்கப்படுகிறது.

இந்நிலையை மாற்றியமைக்க, பல்வேறு தேசங்களில் பல்வேறு தளங்களில் அடக்கப்பட்ட மக்கள் தமது விடுதலைக்காகவும், சுய இருப்புக்காகவும் இறைமைக்காகவும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஆதிக்க உலகிற்கெதிரான அடக்கப்பட்ட உலகின் பொது நிகழ்வுப் போக்காயுள்ள தேசங்களின் விடுதலை, சுய அடையாளம், இறைமை என்பன இந்த நூற்றாண்டின் பிரதான போக்காகவும் உலகை மாற்றியமைக்கப் போகும் காரணிகளாகவும் எழுச்சி பெற்றுவருகின்றது. எமக்கான நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்க வேண்டியிருப்பதன் முன்நிபந்தனையாக இந்த அடிப்படைகளைப் புரிந்துகொள்வோம். அந்த அடிப்படையில், பரஸ்பர உரையாடல்கள் மற்றும் மாற்றங்கள் ஊடாக, எமக்கான நிகழ்ச்சி நிரலை நாமே தயாரிப்போம்.

இந்த நிலைமைகளிலிருந்து மலையகத் தேசத்தின் பிரச்சினையை அணுகுவோம். அனேகமான தேசங்களில் அத்தேசத்தின் இயக்கப்போக்கை அடையாளப்படுத்துபவர்களாக இருப்பவர்கள் அத்தேசிய சமூகத்தின் அதிகாரம் படைத்த கல்விகற்ற தரப்பினராவர்.

எனினும் மலையகத் தமிழ்த் தேசத்தின் சமூகப் பண்பைப் பார்ப்போமாக இருந்தால், இங்கு அடிப்படையானது உடலுழைப்பில் ஈடுபடும் உழைக்கும் மக்கள் பிரிவினராலானதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேசத்தின் அதிக பெரும்பான்மை மக்கள் பிரிவினர் பெருந்தோட்டத்துறை எனும் குறிப்பிட்ட உற்பத்தி நடவடிக்கையுடன் தம்மை பிணைத்துக்கொண்ட கூலித் தொழிலாளர்களாக உள்ளனர்.

ஆக, இந்த விதத்தில், மலையகத் தமிழர் என்ற அடையாளத்தின் பிரதான பண்பைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் இத்தொழிலாளர்கள் அமைகின்றனர் என்பதோடு அதுவே, பிரதானமான அடையாளமாகவும் அமைந்து விடுகின்றது.

அதே போல் சாதிய அடிப்படையில் மலையகத் தமிழ்த்தேசத்தை அணுகுவோமாயின் தேசத்தின் 81 சதவீதத்தினர் தலித்துகளாவர். இது மலையகத் தேசத்தை தலித் தேசமாக அடையாளப்படுத்துகிறது.

அவ்வாறே உழைக்கும் மக்களால் அடையாளப்படுத்தப்படும் மலையகத் தேசத்தின் அரைவாசிகும் அதிகமானோர் பெண்களாவர்.

அவ்வகையில் மலையகத் தேசத்தின் அடையாளமானது உழைக்கும், வர்க்க, தலித்திய மற்றும் பெண்களின் நேரடி பங்கேற்பின் உருவாக்கத்திலானதாகவுள்ளது. மலையகத் தேசத்தின் இப்பண்பானது, தேச உருவாக்கங்களில், மிகவும் அபூர்வமான நிகழ்வுகளில் ஒன்றே எனக் கூறலாம்.

இவ்வாறான பண்பைக் கொண்ட மலையகத் தேசம் அடிப்படைவசதிகள்

"ஒட்டு மொத்த சமூக அக்கறையிலிருந்தும் தூக்கி எறியப்பட்டுள்ள மலையக தலித்துகள்."

மறுக்கப்பட்ட பெரும் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு வந்த அதே நேரம், கடந்த நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலிருந்தே பேரினவாதத்தின் அடக்குமுறையை எதிர்கொண்டு வருகிறது. இலங்கையின் பேரினவாத வரலாற்றில் குறிப்பாக காலனித்துவ காலப்பகுதியில் மலையக மக்களுக்கு எதிராகத் தான் பேரினவாதம் முதலில் கட்டவிழ்த்து விடப்படுகிறது. ஒப்பீட்டளவில், பலவீனமாக இருந்த ஒரு சமூகத்தின் மீது தனது பேரினவாத அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டு பல "பரிசோதனை"களை மேற்கொண்டது என்றால் அது மிகையாகாது. அது நடைமுறையாயினும் சரி. சித்தாந்தமாக இருந்தாலும் சரி. இதனுடைய பலாபலன்களை எமது தேசம் இன்றும் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றது.

பிரஜாவுரிமைப் பறிப்பு, கட்டாயமாக நாடுகடத்தப்படல், அடிப்படை உரிமை பறிப்பு என ஒரு தேசம் எந்தளவுக்கெல்லாம் அடக்குமுறைக்குள்ளாக முடியுமோ அந்தளவு அடக்குமுறைகளை மலையகத் தேசம் எதிர்கொண்டு வருகிறது.

இதன் மறுபுறம் வெளியுலகிற்கு ஏதோ ஒரு அடிமைக் கூட்டம் போலதென்படும் இம்மக்கள் சமூகம் தனது ஒவ்வொரு காலகட்ட உரிமைகளுக்காகவும் தொடர்ச்சியாக போராடி வருகிறது. போராட்டம் என்பது மலையக தேசத்தின் வாழ்வுடன் பிணைந்த ஒன்றாக உள்ளது. போர்க்குணமும் ஆளுமையும் கொண்ட ஒரு பிரிவினரே மலையகத் தமிழர்கள். இவர்களது வாக்குரிமைகளையும் பிராஜாவுரிமைகளையும் பறிக்க வேண்டியளவுக்கு சிங்களப் பேரினாதம் இருந்தது என்றால் அவர்களின் போர்க்குணாம்சத்தை அவர்களின் பலத்தையும் நீங்கள் இங்கு கற்பனை பண்ணிப் பாருங்கள்.

எனினும் தம்மை ஏனைய சமூகங்களுக்கு நிகராக வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருக்கும் நிலையில் குறைந்தபட்சம் தம்மைப் பற்றி வெளியுலகுக்கு அறிவிக்க தகவல்களை பரிமாறிக்கொள்ளக்கூட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இன்றைய உலகின், அதுவும் நவீன தொழில்நுட்பத் தகவல் பரிமாற்ற உலகில், தம்மை இணைத்துக் கொள்வதற்கு முன்னான பல்வேறு கட்டங்களைத் தாண்டுவதற்கே அவர்கள் போராடியாக வேண்டியுள்ளது.

தோழமையுடன்டபுற சிறுவர் பாடசாலைகளிலிருந்தே அவர்களுக்கு இன்று சிங்களம் மட்டும் ஊட்டப்படுகிறது. இந்த வருட போர்ச்செலவுக்கு மாத்திரம் பல ஆயிரம் கோடிகள் ஒதுக்கப்படும் அதே நேரம் அங்கு வருடக்கணக்காக ஒரு ரூபா கூலி உயர்வுக்காக பல நாள் பட்டினி கிடந்து போராட வேண்டியநிலை. 100 ஆண்டுகளுக்கும் மேல் பழமைவாய்ந்த அதேசிறிய காம்பராக்களில் தான் இன்னமும் வாழ்கின்றனர்.

மலையக மக்கள் தமக்காக தாமே போராடிக்கொள்வார்கள். ஆனால் தமிழ் பேசும் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தின் தார்மீகமான ஆதரவுகள் ஒத்துழைப்புகள் என்னவாக இருக்கவேண்டும் என்பதையே இங்கு கேள்வி எழுப்ப விரும்புகிறேன்.

தமக்கு அயலில் சகதேசமொன்று சிங்கள அரசுக்கெதிராக போராடி வரும் வேளை பரஸ்பரம் இந்த இரு சமூகங்களுக்கிடைலான உறவுகள், மற்றும் எதிர்கொள்ளும் அடக்குமறை காரணமாக ஒன்றைஒன்று ஊடறுக்கின்ற பாதிக்கின்ற போக்குகளையும் நாம் இங்கு குறித்துக்கொள்கைப்பரப்பு பிரவுள வேண்டும்.

மலையக மக்களின் போராட்டங்கள் அவர்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகள் குறித்து பதிவாவது என்பது குதிரைக் கொம்பாகத்தான் இருக்கிறது. இன்று இலங்கையில் வெளிவரும் ஒரு சில பத்திரிகையின் வாயிலாகக் கிடைக்கின்ற செய்திகளைத் தவிர வேறு வழியில் மலையகத் தேசத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் வெளிவருவதில்லை. இலங்கைக்கு வெளியில் சொல்லவே வேண்டாம். எத்தனை பேருக்கு ஈழப்பிரச்சினை குறித்து தெரிந்திருக்க அளவுக்கு மலையகப் பிரச்சினை பற்றித் தெரிந்திருக்கிறது?

அரசு, நவபாசிச வடிவமெடுத்திருக்கிற சிங்களப் பேரினவாதம், அவர்களை கடுமையாக சுரண்டி கொழுக்கும் வர்த்தக சமூகத்தினர் அவர்களின் பிரச்சினைகளை வெறும் தமது பிழைப்பு அரசியலாக்கி வரும் அரசியல் சக்திகள், சாதியக் கட்டமைப்பை நிலைநிறுத்துவதில் போட்டியிட்டு வரும் ஆதிக்க சாதிக் குழுமங்கள் மற்றும் பேரினவாதமயப்பட்டுள்ள சிங்கள சிவில் சமூகத்தவர்களால் எதிர்கொண்டுவரும் வன்முறைகள் என எத்தனை எத்தனையோ கொடுமைகள் தினந்தோறும் நடக்கையில் அவர்களுக்காக போராடுவதையோ அல்லது தார்மீக ஆதரவைத்தான் தரவேண்டாம். அவர்களின் பிரச்சினைகளை வெளியுலகுக்கு கொணர்வதில் எமது பங்களிப்பு என்ன?

இந்த சைபர் ஸ்பேஸ் என்று நாம் கூறுகின்ற வெட்டவெளிக்குள் சகல கொடுக்கள் வாங்கல்களையும் செய்து இன்று ஒரு பெரும் மாநாட்டையே நடத்துகிறோம். பெரும்பாலும் இதற்கான நிர்வாக ஏற்பாடுகள், பேச்சாளர்களுடனான உறவுகள் மற்றும் நிதி ஒழுங்குகள் என சகலதுமே தகவல்தொழில்நுட்பத்தின் வாயிலாக மேற்கொண்டு வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிறோம். நாளை இவ்வாறான மாநாடொன்றை கஸ்டப்பட்டு ஒன்றுகூடி நடத்தவும் வேண்டியேற்படாத அந்தளவுக்கு தகவல்தொழில்நுட்பம் எங்களை இறுக இணைத்துவிடும்.

ஆனால் இன்று மின்சார வசதிகளைக் கூட அடையாமல், கல்விரீதியில் வளர்ச்சியடைய விடாமல், வெறும் ஒரு ரூபா சம்பள உயர்வுக்காக போராடிக்கொண்டிருக்கும் மலையக மக்கள் குறித்து எந்தவித விபரங்களையும் உலகம் அறியாத வண்ணமுள்ளன. இன்று ஈழப்பிரச்சினை காரணமாக வடக்கு, கிழக்கின் மொத்த சனத்தொகையின் மூன்றில் ஒரு பகுதியினர் புலம்பெயர்ந்து வாழ்வது உங்களுக்குத் தெரியும். நண்பர் சேரன் கூறுகின்ற ஆறாம்திணையான புலம்பெயர்ந்தவர்களுக்கூடாக ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து வெளிவருகின்ற போதும், மலையக மக்கள் பற்றி வெளித்தெரியாத வண்ணம் இன்றைய சூழல் இருக்கிறது. இது தற்செயலானதல்ல. ஈழத்தமிழர்கள் கொண்டுள்ள வளங்கள், ஆற்றல்கள், வாய்ப்புகள் கூட மலையக மக்களுக்கு இல்லை. சக தேசத்தைச் சேர்ந்தவர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்கின்ற போக்கை ஈழப்போராட்ட சார்பு தகவல் தொடர்பூடகங்களில் கூட காணமுடிவதில்லை. அப்படியும் வெளிவந்துவிட்டால் அவை எதிரியை அம்பலப்படுத்துவதற்கான

வழிமுறையாகத்தான் இருக்கறதே ஒழிய, மலையகத் தேசத்தின் பிரச்சினையில் கொண்டுள்ள பிரக்ஞையால் அல்லவென்றே கூறலாம். தமிழகத்தை மையமாகக்கொண்டும், சிங்கப்பூர், மலேசியா மற்றும் வேறு புகலிட நாடுகளிலிருந்துமாக பல இணையத்தளங்கள் கூட அதிகரித்தவண்ணமுள்ளன. ஆனால் இதில் எத்தனைதூரம் மலையகத்தவர் பற்றிய குறைந்தபட்ச போராட்டங்கள், கோரிக்கைகள் கூட பதிவாகின்றன.

நிச்சயமாக மலையகத்தவர் பற்றிய எமது அக்கறையின்மையும், அசட்டையையும் நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

வடக்கு கிழக்குக்கு வெளியில் ஏறத்தாழ 12 லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள். காலனித்துவ சக்திகளால் இவர்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட போது பெரும்பாலும் அடக்கப்பட்ட சாதியப்பிரிவினரே அதிகளவு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்தனர்.

மலையகத் தேசத்தை ஒரு தலித் தேசமாகவும் நோக்கும் போது இலங்கையில் நிலவுகின்ற மூன்றுவித சாதியக் கட்டமைப்புகளான வடக்கு கிழக்கு, மலையக, சிங்கள சாதியமைப்புகளின் தன்மையை இங்கு நோக்குவது அவசியம். பொதுவாக சாதிய அதிகாரத்துவ படிநிலை நிரலொழுங்கு தலைகீழ் கூம்புவடிவத்தில் ஆதிக்க சாதி மேலும், அடக்கப்படும் சாதிகள் கீழுமாக கட்டமைக்கப்பட்டுள்ளதை நாமறிவோம். இந்திய சாதிய கட்டமைப்பை அப்படியே கொண்டுள்ள ஆனால் பிராமணரை ஆதிக்க சாதியாக கொள்ளாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியமைப்பைக் கொண்டதுமான மலையக சாதியமைப்பில் அளவு ரீதியாக தலித்துகள் பெரும்பான்மையினராகவும் ஆதிக்க சாதிகள் சிறுபான்மையினராகவும் உள்ளனர். அதாவது தலைகீழ் கூம்பு வடிவமாக மேலே தலித்துகளும் கீழே உயர்த்தப்பட்ட சாதியினரும் அளவு ரீதியில் இருப்பதைக் காணலாம். ஆனால் இலங்கையில் சிங்கள சாதியமைப்பும், வடக்கு கிழக்கு சாதியமைப்பும் அளவு ரீதியில் உயர்த்தப்பட்ட சாதிகளின் எண்ணிக்கையை அதிகமாகவும் அடக்கப்படும் சாதிகளின் எண்ணிக்கை அளவில் குறைந்ததாகவும் இருக்கிறது. வடக்கு கிழக்கில் ஆதிக்க சாதியான வெள்ளாளர் சனத்தொகையில் 50 வீதத்துக்கும் அதிகமாக இருப்பதைப் போல, சிங்கள சாதியமைப்பிலும் 50 வீதத்துக்கும் அதிகமாக வெள்ளாருக்கு ஒப்பான சிங்கள ஆதிக்க சாதியான கொவிகமசாதியினர் 50 வீதத்துக்கும் அதிகமுள்ளனர். பொதுவாகவே இந்தியாவிலிருந்து காலனித்துவ சக்திகளால் வேறுநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மக்கள் பெரும்பாலும் அடக்கப்படும் சாதிகளைச் சேர்ந்தவர்களாதலால், அவர்கள் இன்றளவிலும் வாழும் நாடுகளில் பெரிய எண்ணிக்கையைக் கொண்ட அடக்கப்படும் சாதிகளைக் கொண்டுள்ளவர்களாகவே உள்ளனர். எனவே தான் மலையக மக்களை நாங்கள் தலித்திய சமூகப் பார்வையை விட்டுவிட்டபார்க்க முடியாத கட்டாயத்தில் இருக்கிறோம்.

மலையக சமூக அமைப்பில் இருக்கின்ற குறைந்தளவு எண்ணிக்கையையே உடைய உயர்த்தப்பட்ட (ஆதிக்கச்) சாதியினர்,- மேலாதிக்கம் செலுத்துகின்ற அரசியல், பொருளாதார மற்றும் ஏனைய ஆதிக்க பண்புகளையும், வளங்களையும் வாய்ப்புகளையும் கொண்டிருக்கிறனர். இவர்கள் நாளுக்குநாள் நிறுவனமயப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்தியாவைப் போல நேரடியான தீண்டாமைக் கொடுமை இல்லாவிட்டாலும் ஏனைய அனைத்து சாதிக் கொடுமைகளுக்கும் உள்ளாவதும், ஆதிக்க சாதிகள் மேலும் தமது அதிகாரத்துவ நலன்களுக்காக நிறுவனமயப்படுவதுமான போக்கு அதிகரித்துவருகிறது. மேலும் பறையர் மற்றும் அருந்ததியர் ஆகிய சாதிகளைச் சேர்ந்தவர்கள் நூறாண்டுகளாக அதே நிலைமையில் இருத்தப்பட்டுள்ளமை போன்ற நிலைமையை நாங்கள் கருத்திற்கொள்ள வேண்டும். இன்றைய சாதிய கட்டமைப்பை பழைய அதன் வடிவத்தைப் போலப் பார்க்க முடியாது. அது இன்று நவீன சமூக உருவாக்கங்களின் பண்புகளை உள்நுழைத்த புதிய அதற்கேற்க சாதிய வடிவங்கள் புதுப்பித்துக்கொண்ட வேறுவடிவங்களைத் தாங்கிய ஒன்றையே நாம் காணலாம்.

எப்படி சிங்களத் தேச அரச கட்டமைப்பு தமிழர்களின் பிரச்சினை விளங்கிக் கொள்ளவில்லையோ, சிங்களத் தேச அரச கட்டமைப்பு மற்றும் தமிழீழ போராட்ட சக்திகள் இரண்டுமே மலையகத் தமிழர்களின் பிரச்சினையை சரியாக விளங்கிக்கொள்ளவில்லையோ. இந்த மூன்று அரசியல் சக்திகளும் வடக்கு கிழக்குக்கும், மலையகத்திற்கும் வெளியில் தமிழர்களின் பிரச்சினையை விளங்கிக் கொள்ளவில்லை. வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதியில் வாழும் தமிழர்கள் ஒருவகையில் புவியியல் ரீதியிலான அடையாளங்களையும் அதற்கான கோரிக்கைகளையும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவை இரண்டிற்கும் வெளியில் வாழும் தமிழர்களுக்கு எந்த வித அரசியற் தலைமையோ அல்லது பொதுவான கோரிக்கையையோ கொண்டிராத நிலைமை நீடித்துவருகிறது. எந்த அரசியற் சக்திகளின் பின்னாலும் போகக் கூடிய தன்மையையும், சில பகுதிகளில் சிங்கள மயமாக்கப்பட்டு வருவதையும் காணமுடியும்.

பொதுவாக வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவழியினரையும் சேர்த்து மொத்தமாக மலையகத் தேசத்தவர்கள் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. இந்த அடையாள வரையறைகளில் சில சிக்கல்கள் இருக்கின்ற போதும் இங்கு ஒட்டுமொத்த பிரச்சினையின் கவனக் குவிப்புக்காக இப்பதத்தையே நானும் இங்கு கையாள்கிறேன்.

இவர்களில் அருந்ததியர்கள் நாடளாவிய ரீதியில் நகர சுத்தித் தொழிலாளர்களாக நகர சுத்தி குடியிருப்புகளில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் வட மத்திய, வட மேற்கு மற்றும் தெற்குப் பகுதியில் சிங்களவர்களாகவே மாறிவிட்ட போக்கையும் மாறிவரும் போக்கையும் காணமுடியும்.

சாதியால் ஒடுக்கப்பட்டவர்களாகவும், கூலியுயர்வுக்காகப் போராடும் உழைக்கும் வர்க்கத்தினரைக் கொண்ட பெரும் தொழிற்படையாகவும், நாட்டின் மொத்த வருமானத்தில் பெருமளவை பெற்றுத்தரும் வர்க்கமாகவும், நவ பாசிச வடிமெடுத்துவரும் சிங்களப் பேரினவாதத்துக்கும், பேரினவாதமயப்படுத்தப்பட்டு வரும் சிங்கள சிவில் சமூகத்தின் வன்முறைகளை நேரடியாக அனுபவித்துவரும் கூட்டமாகவும் இவர்கள் உள்ளனர். 150 வருடங்களுக்கு மேலாகியும் இன்னமும் குடியுரிமை அற்றவர்களாகவும், அரசியல் அனாதைகளாக ஒரு கூட்டம் இருக்கிறதென்றால் அது மலையகத் தேசத்தவர்கள் தான்.

இதில் அவதானிக்க வேண்டிய முக்கிய புள்ளிகளில் ஒன்று என்னவென்றால், இவர்கள் பற்றிய எதுவும் வெளித்தெரியாத புறநிலைமைகள் இயங்குகின்றன என்பதே!

இன்று தமிழர்களுக்கான பல ஆயிரக்கணக்கான இணையத்தளங்கள் குவிந்துகொண்டே இருக்கின்றன. இன்று ஆங்கிலம் மூலமாக இணையத்தினூடாகப் பரப்பப்படும் புனையப்பட்ட கருத்துகள், தகவல்கள், கதையாடல்களுக்கு தமிழர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதுமாக ஆட்படுவதற்கு முன்னம் தமிழர்கள் இந்த தகவல் தொழில்நுட்பத்தை இலகுவாக அடைந்துவிட்டார்கள் தான். ஆனால் இந்த தகவல் என்ற விடயத்தில் தகவல் தொழில்நுட்பம் மீளவும் யாருக்கு எந்த சக்திகளுக்கு, எந்த கருத்தாக்கங்களுக்கு சேவை செய்கின்றன என்பது குறித்து நாம் அக்கறையற்று இருக்க முடியாது. தகவல் தொழில்நுட்ப நூற்றாண்டு இது என்று கூறப்படும் நிலையில் தகவல்களுக்கு வறுமை பெருமளவு இருக்காது என்கிற நம்பிக்கை ஆரம்பத்தில் எனக்கு இருந்தது. ஆனால் அது தவறென நான் உணர்ந்தேன். தகவல்கள் குவிந்து கொண்டிருக்கும். ஆனால் அவை ஆதிக்க கருத்தேற்றம் செய்யப்பட்டதாக இருக்கும் என்று நம்பினேன். ஆனால் தகவல்களுக்கே எந்தளவு பஞ்சமிருப்பதை இப்போது ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது

இன்றைய பெரும்போக்கு எது என்பதை தீர்மானிக்கின்ற முக்கியமான கருவியாக தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுள்ளது. ஆதிக்க சக்திகள், தமது பிற்போக்கு ஆதிக்க சித்தாந்தங்களை பெரும்போக்காக நிலைநிறுத்துவதில் இந்த தகவல் தொழில் நுட்பத்தைக் கொண்டுதான் துரிதமாக வெற்றி கண்டு வருகின்றன.

இன்று தமிழில் கணிய மற்றும் இணையத் தொழில்நுட்பங்கள் குறித்த உட்கட்டமைப்பு மற்றும் மென்பொருள் பற்றிய அகக்கறையும், ஆய்வுகளும் தான் மெற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அதன் புறநிலைச் செயற்பாடுகள், அதிலும் குறிப்பாக அதன் அரசியல் விளைவுகள், புரட்சிகர சமூக மாற்றத்துக்கான அரசியல் அடைவுகள் குறித்து வெறும் தனிநபர்கள் மற்றும் சிறு குழு அளவில் தான் அக்கறை கொள்ளப்படுகிறதே ஒழிய அதனை தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தோடு இணைத்து ஆராயப்படுவதை காண முடிவதில்லை.

இத்தகைய பின்னணியிலிருந்து மலையக மக்களின் இன்றைய நிலைமைகள் பதிவாகாததையும், நோக்க வேண்டும். இன்று தமிழ்த்தேசப் பிரச்சினை சர்வதேச அளவில் கரிசனைக்குரியதாக ஆக்கியதில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கை நோக்க வேண்டும். இன்று தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இனஅழிப்பு குறித்த செய்திகள் வேகமாக உலகெங்கும் சென்றடைகின்றன. உலகின் பலமான நாடுகளின் உதவியுடனும், ஒரு அரசையும் கொண்டிருக்கிற

மலையகத் தேசத்தவர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஏலவே எதிர்கொள்ளும் அடிமை வாழ்க்கையை விட தமிழ்த்தேசப் போராட்டத்தின் விளைவான ஒட்டுமொத்த தமிழர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்திற்கும் பலியாகிவரும் தேசமாக மலையகத் தேசம் உள்ளதை கவனித்தாக வேண்டும்.

சிங்களப் பேரினவாதம் தகவல் தொழில்நுட்ப ஆற்றல் வளங்கள் என்பனவற்றை எதிர்கொள்ள முடியாத அளவுக்கு தடுமாறி நிலைகுலைந்து போகுமளவுக்கு தமிழர்கள் தகவல் தொழில்நுட்பத்தை அடைந்திருக்கிறார்கள். தமிழ்த் தேசப் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிக்கு தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு முக்கியமானது. ஆனால் இன்றளவிலும் தமிழ்த்தேசப் போராட்ட சக்திகளால் அல்லது அவர்களது ஆதரவாளர்களால் நடத்தப்படுகின்றன ஆயிரக்கணக்கான இணையத் தளங்களிலும் மலையக மக்கள் குறித்த எந்தவித பதிவுகளும் இடம்பெறாதது மிகவும் கவலையைத் தரும் விடயம். சக தேசமொன்று தமது எதிரிகளாலேயே ஒடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதை கரிசனை கொள்ளாததை நாம் குறித்துக்கொள்வது அவசியம்.

மலையகத் தேசத்தவர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஏலவே எதிர்கொள்ளும் அடிமை வாழ்க்கையை விட தமிழ்த்தேசப் போராட்டத்தின் விளைவான ஒட்டுமொத்த தமிழர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்திற்கும் பலியாகிவரும் தேசமாக மலையகத் தேசம் உள்ளதை கவனித்தாக வேண்டும். இந்தியாவின் மீது நம்பிக்கையிழந்து பல வருடங்களாகிவிட்டது. ஏலவே இலங்கையில் யாழ் மைய வாதத்துக்கு வடக்குகிழக்கின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்ல வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழர்களும் அந்த சிக்கல்களை அனுபவித்து வந்தவர்கள். இலங்கையில் செயற்படும் தமிழ் தொடர்பூகங்கள் அனைத்திலும் மலையக மக்களுக்கெதிரான பாரபட்சங்கள் நிலவுவதை காணமுடியும். மலையக மக்களின் பிரச்சினை குறித்த விடயங்கள் வெளியிடப்பட்டால் அது அப்பிரச்சினை குறித்த பிரக்ஞை என்பதை விட மலையக சந்தையை இலக்காகக் கொண்டு தான் இருக்கும்.

எப்படியோ மலையகத் தேசத்தின் எதிர்காலத்தை மற்றவர்களிடம் பொறுப்பாக்கிவிடுவது அல்ல இதன் அர்த்தம். மலையகத் தேசம் தனக்கான போராட்ட வடிவங்களையும் எதிர்காலத்தையும் தானே வடிவமைத்துக்கொள்ளும். ஆனால் கவனிப்பாரற்று கிடக்கும் போக்கை மாற்றியமைப்பதில் எம்மெல்லோரது பங்கையும், தார்மீக ஆதரவையுமே இங்கு நாம் கோரவேண்டியுள்ளது. மலையகத் தேசத்தின் அரசியல், பொருளாதார, கலாசார, பண்பாட்டு அம்சங்களைக் கணக்கிற்கெடுக்கின்ற தமிழ் சூழலியே வேண்டிநிற்கிறோம்.

(2000ம் ஆண்டு செப்டம்பர் சென்னையில் இடம்பெற்ற தமிழினி மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஒரே மலையகக் கட்டுரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

ASOKAS

Radio House & Video Vision

(Specialist in video filming, Still Photography, Fixing Dish Antenna, Computer Assembling & All Types of Electronic Goods

No. 8, Gunawardana Building,
Hatton,

With Best Compliments from:

CROWNSON & COMPANY

No. 3, Circular Road,
Hatton,
Tel: 051-22430, 051-22603

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from:

SEAGULL HARDWARE

No. 211, Main Street,
Kotagala,
Tel: 051-23112

ESTD : 1940

With Best Compliments from:

Tel : 051 - 22684
Fax : 051 - 32277

REAGAL ENTERPRISE

Dealers in
Fancy Goods, Stationeries, Electrical Goods, Eversilvewares, News Agent & Pawn Brokers

No. 79, Main Street,
Hatton,

K.P.N NALLUSAMY & Co

Dealers in
Fancy Goods, Stationeries, Electrical Goods, Eversilvewares, News Agent & Pawn Brokers

No. 07, Main Street,
Norton Bridge

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கலாசார விழா - 2002
விருது பெறுவோர் விபரம்

1. மை.பன்னீர்
   சி.வி வேலுப்பிள்ளை நினைவு பரிசு
   (கவிதைப்போட்டியில் முதலாம் இடம்)

2. ச.இராகவன்
   புதுமைப்பித்தன் நினைவுப் பரிசு
   (சிறுகதைப் போட்டியில் முதலாமிடம்)

3. இரா.ஜெ.ட்ரொஸ்கி
   முல்லோயா கோவிந்தன் நினைவுப் பரிசு
   (கட்டுரை போட்டியில் முதலாமிடம்)

4. என்.சண்முகதாசன்
   மலையக மக்கள் விருது
   (மலையக அரசியல் ஆய்வுக்காக)

5. எம்.வளர்மதி
   எஸ்.மகேஸ்வரி
   சரோஜா
   இலட்சுமி
   கோ.நடேசையர் நினைவுப் பரிசு
   (மக்கள் எழுச்சிகளை வழிநடத்தியமைக்காக)

6. எம்.நாகலிங்கம்
   எம்.சிவராம்
   ஜீவராஜன்
   எஸ்.ஜெயகுமாரி
   சி.கனகமூர்த்தி
   ஷாமலி இராமநாதன்
   வீ.தீ. தர்மலிங்கம் நினைவுப்பரிசு
   (மலையக கல்வித் துறை பங்களிப்புக்காக)

7. எஸ். நடேசன்
   பீ.ஏ.காதர்
   இவான் டெறிசன் (அவுஸ்திரேலியா)
   மார்க் பிரஸ்கேட்டில் நினைவு பரிசு
   (தொழிற்சங்க, ஆய்வு பணிகளுக்காக)

8. சோ.சந்திரசேகரன்
   ஜீ.ஞானமுத்து நினைவு பரிசு
   (கல்வி ஆய்வு பணிக்களுக்காக)
   லிட்டில் ஏன்ஜலின் (பிரித்தானியா)

9. தலாத்துஒயா கே.கணேஷ்
   லூசுன் நினைவுப் பரிசு
   (மொழிபெயர்ப்பு, இலக்கிய பணிக்காக)
   கார்த்திகேசு சிவத்தம்பி

10. தெளிவத்தை ஜோசப்
    ஜேம்ஸ் விக்டர்
    மல்லிகை சி. குமார்
    என்.எஸ்.எம்.இராமையா நினைவுப் பரிசு
    (மலையக சிறுகதை இலக்கியத்துக்காக)

11. சரிநிகர் பத்திரிகை
    பாரதி நினைவுப் பரிசு
    (மலையக மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்திய பத்திரிகை பணிகளுக்கா)

12. இளஞ்செழியன்
    ஈ.வே.ரா. பெரியார் நினைவுப் பரிசு
    (பகுத்தறிவு பாரம்பரியத்திற்காக)

13. மக்கள் பண்பாட்டு தூதுவன் பரிசு
    (மலையக பாரம்பரிய கலைகளை பாதுகாத்து வளர்த்தமைக்காக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிவை நோக்கி

அமாவாசை இரவு, இயற்கை மங்கையானவள் தனது இருள் ஆடையை நன்றாக இழுத்து போர்த்தி கொண்டதாலோ என்னவோ கரிய இருள் வையகமெங்கும் விரவிக் கிடந்தது. இயற்கை மங்கையின் விளையாட்டுத்தோழர்களான மின்மினிப் பூச்சிகள் பகல் எல்லாம் ஒளிந்திருந்துவிட்டு இரவிலே கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருந்தன. உயரேப் போய்விட்டதால் தனக்கு இவற்றோடு விளையாடும் பாக்கியம் இல்லாமல் போய்விட்டதே என்ற ஏக்கத்தில் வானம் சிந்திய கண்ணீர் துளிகள், பனித்துளிகளாக மாறி பகல் எல்லாம் உஷ்ணத்தின் உச்சியிலே இருந்த பூமித்தாயைக் குளிர்வித்துக் கொண்டிருந்தன. ஆகாயத்தில் அன்று வெண்மதியைக் காணவில்லை என்று நட்சத்திரங்கள் கண்சிமிட்டி தேடிக்கொண்டிருந்தன.

இயற்கையின் ஜால வியைாட்டுகளை ஆட்சேபிப்பது போல தூரத்தில் நரிகளின் ஊளைச்சத்தம் கேட்ட வண்ணம் இருந்தன. அதற்குப் போட்டியாக இரவு நேர சில் வண்டுகளின் ரீங்கார ஒலி காதில் இரவு நேர தேவகானமாக ஒலித்த வண்ணம் இருந்தது.

பொன்னிமலைத் தோட்டத்தைச் சேர்ந்த அந்தத் தொழிலாளர்கள் குடியிருப்பு அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தது "மேட்டு லயம்" என்றப் பெயரைக் கொண்ட அந்தத் தொழிலாளர் குடியிருப்பில் ஐந்துக் குடும்பங்கள் வசித்து கொண்டிருந்தன. வெள்ளைச் சுண்ணாம்பினால் மட்டுமே வருடந்தோறு மெருகூட்டப்படும் அந்தக் கட்டிடத்திற்கு வேறெந்த அடிப்படை வசதிகளும் இல்லை. குடிநீரிற்காக அந்த ஐந்து குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் இரண்டுமைல் தூரம் நடந்துச் சென்று "பெரியப்பீலி"யிலிருந்து நீர் எடுத்து வர வேண்டும். அங்கு வசிக்கம் சின்னஞ்சிறிசுகளுக்கு மின்சாரம் என்றால் என்ன என்றே தெரியாத அளவிற்கு பின் தங்கியது அந்தக் குடியிருப்பு. கணணி என்றும் இணையத்தளம் என்றும் நாகரிக உலகம் ஜெட் வேத்தில் முன்னேறிக் கொண்டிருந்தாலும் இந்த அப்பாவி மக்கள் நோய் எதுவும் ஏற்பட்டால் செல்வது வைத்தியரிடம் அல்ல, மலையகத்தை மூடநம்பிக்கை என்ற பெயரில் அணு அணுவாக அழித்துக் கொண்டிருக்கும், மந்திரம், கண்கட்டு வித்தைகளால் மக்களின் கண்களைக் கட்டிப் போட்டிருக்கும் மாந்திரீகர்களில் ஒருவரிடம்தான். அதுமட்டுமல்ல நூற்றுக்கு தொண்நூற்றி ஒன்பது

வீதமான பெற்றோர்கள் தமது சின்னஞ் சிறு குழந்தைச் செல்வங்களை அனுப்புவது பாடசாலைக்கல்ல கொழும்புப் பட்டிணத்தில் வீடுகளில் வேலைக்கு. அங்கு அந்தப் பிஞ்சுகள் உடலாலும், உள்ளத்தாலும் பலக்கொடுமைகளை அனுபவித்து செந்நீரை தண்ணீராக சிந்தி சம்பாதித்து அனுப்பும் பணம் இங்கு குடிகாரத் தந்தையின் தொண்டையில் மதுபானமாக சங்கமிக்கும்.

ஊரே உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அந்த மேட்டு லயத்தின் ஒரு யன்னலில் மட்டும் குப்பி விளக்கு கண்சிமிட்டிக் கொண்டிருந்தது. அங்கு செல்வம் தனது புத்தகங்களை மேசையில் பரப்பி போட்டவாறு படித்துக் கொண்டிருந்தான். உறக்கம் மறந்து ஆழந்து படித்துக் கொண்டிருந்தவனை அவனது அருமைத் தாயான காமாட்சியின் குரல் உலுக்கியது. "டேய் செல்வம் லாம்பில் கொஞ்சந்தான் எண்ணெ இருக்கு, நாளக்கி மிச்சத்த படிக்கலாம், இப்ப வந்து படுடா என் ராசா" என்ற தாயின் கெஞ்சலை செவியில் போட்டுக் கொண்ட செல்வத்திற்கு அவளின் குரலில் தொணித்த இயலாமையையும், வறுமையையும் நன்றாகப் புரிந்துக் கொள்ள முடிந்தது. மேசையில் பரவிக் கிடந்த நூல்களை ஒழுங்குப் படுத்தி விட்டு, விளக்கை அணைத்து விட்டு வந்து, படுத்தான் செல்வம். கிழிந்த ஓலைப்பாயானது அவனது முதுகைப் பதம் பார்க்கத் தொடங்கியதால் பாயை ஒரு ஓரமாக தள்ளிவிட்டு கையை மடித்து தலைக்கு அணைகொடுத்தாவறு கட்டாந்தரையில் படுத்தவனை மலையைச் சொத்தான குளிர், ஈட்டி போல் வந்து தாக்கத் தொடங்கியது. இதனால் கண்களை சுழற்றிய தூக்கத்தை முற்றாக இழந்த செல்வத்தின் கண்கள் ஏதேச்சையாக மறுபக்கம் நோக்கியது. அங்கு அவனது ஒரே தங்கையான கலைவாணியும், தாய் காமாட்சியும் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களிற்கு பக்கத்தில் செல்வத்தின் தந்தையான வடிவேலு தன்னையே மறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதியாக குறட்டைச் சத்தத்துடன் உறங்கிக் கொண்டிருந்தான். அவனிடமிருந்து வீசிய மதுபான நெடி முழு அறையையும் ஆக்கிரமித்திருந்தது.

நித்திரையை இழந்திருந்த செல்வத்தின் சிந்தனை தனதுக் குடும்பத்தாரையும், குடும்ப நிலையையும் சுற்றி சுற்றி சுழன்றுக் கொண்டிருந்தது.

செல்வமும், கலைவாணியும் காமாட்சி, வடிவேலு தம்பதிகளின் பிள்ளைகள், செல்வம் பெயரில் மட்டும்தான் செல்வத்தைக் கொண்டிருந்தான் ஆனால் அவனது குடும்பமோ வறுமை கோட்டிற்கு மிக மிக கீழே காணப்பட்டது. செல்வம் தற்போது தோட்டப் பாடசாலையில் ஒன்பதாம் வகுப்பில் கல்விப் பயின்றுக் கொண்டிருந்தான். படிப்பிலே செல்வத்தை விஞ்ச முடியாது. செல்வத்தினால் அந்தப் பாடசாலை பெருமை பெற்றுக் கொண்டிருந்தது என்றாலும் மிகையாகாது.

"பட்ட காலிலே படும்" என்பார்களே அது கலைவாணியின் விடயத்திலே மிகச் சரியாக அமைந்து விட்டது. போதிய மருத்துவ அறிவின்மையால் கலைவாணிக்கு பிறந்த போது போலியோ தடுப்பூசி ஏற்றவில்லை. இதனால் பிறப்பில் நன்றாக இருந்த அவளின் காலிரண்டும் நாளடைவில் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டு இரண்டுக் கால்களும் செயலற்றுப் போய் விட்டன. இதனால் தனக்குத் தேவையான சிறு சிறு வேலைகளைக் கூட அவள் மற்றவரின் துணையைக் கொண்டு செய்து முடிக்க வேண்டிய துப்பாக்கியை நிலையில் காணப்பட்டாள்.

இவர்களின் தந்தையான வடிவேலுவிற்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் மது என்ற போதை உள்ளிறங்க வேண்டும். வடிவேலு சம்பாதிக்கும் அத்தனை பணமும் மதுவிற்கு அர்ப்பணிக்கப்பட்டுவிடும். அது போதாது என்று வீட்டுத் தேவைக்காக வியர்வை சிந்தி, மலையில் ஏறி இறங்கி அரும்பாடுபட்டு காமாட்சி சேகரிக்கும் பணத்தையும் மனிதர் அபகரித்துவிடுவார். இதனால் எத்தனையோ நாட்கள் அவர்கள் பட்டினியால் வாடியுள்ளனர். எத்தனையோ முறை நீராலேயே வயிற்றை நிரப்பியுள்ளனர். ஆனாலும் எத்தனை கஷ்டம் வந்தாலும் செல்வத்தை எப்படியாவது படிக்க வைத்து சமூகத்தில் நல்ல நிலைக்கு உயர்ந்த வேண்டும் என்ற குறிக்கோளில் இருந்து காமாட்சி இம்மியளவும் பிசகவில்லை. படிக்காமல் கொழுந்து பறிக்க வந்து அவள் பட்ட வேதனைகள் அப்பப்பா! கொட்டு பனியிலும், குளிரும் மழையிலும், சுட்டெரிக்கும் வெயிலிலும் அல்லும்பகலும் அயராது உழைத்தாலும் குடிப்பது கால் வயிறு கஞ்சி மாத்திரமே. உழைப்பு மட்டுமல்ல வியர்வை தேயிலைச் செடிகளுக்கு உரமாய் போக, தொழிலாளர்களின் குருதி அட்டைகளுக்கு விருந்தாய் அமையும். இதை எல்லாம் அனுபவ பூர்வமாக அணுஅணுவாக அனுபவித்தவள் காமாட்சி. நான் பட்ட கஷ்டம் தன் பிள்ளையும் படக்கூடாது என்ற கொள்கையை கைவிடாமல் செல்வத்தை படிக்க வைப்பதனால் அவளுக்கு தினந்தோறும் கிடைக்கும் வெகுமதிகள் என்ன தெரியுமா? வடிவேலுவிடமிருந்து அடியும் உதையும்தான். காரணம் செல்வத்தை கொழும்பில் வேலைக்கு சேர்த்தால் ஒரு பெரியத் தொகை கிடைப்பதோடு மட்டுமல்லாது மாதந்தோறும் வெளிநாட்டு சாராய பாட்டில்களும் கிடைக்கும் என கங்காணி மாரிமுத்து வடிவேலுவிற்கு உறுதியளித்து இருந்தான். இதனால் செல்வத்தை வேலைக்கு அனுப்பி தனது வயிற்றையும், மனதையும் போதையில் பெயரால் நிரப்ப வடிவேலு தீட்டியிருந்த திட்டம் யாவும் காமாட்சியின் பிடிவாதம் காரணமாக தவிடுபொடியாகிக் கொண்டிருந்தது. வீட்டில் எந்நேரமும் ரகளைதான் காமாட்சிக்கு தினந்தோறும் அடியோடுதான் பொழுது அஸ்தமிக்கும், விடியும்.

கதிரவன் வழமை போல தனது கடமைகளை செவ்வனே முடித்து விட்டு உறங்க சென்று விட்டான். தேயிலை தோட்ட தொழிலாளர்களும் காலையிலிருந்து பம்பரமாய் சுழன்று விட்டு சாரி சாரியாக வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். காமாட்சியும் சோர்வுடன் வீட்டிற்குள் நுழைந்தவள் ஆணியில் கூடையை மாட்டி விட்டு உடைகளை மாற்றிக் கொண்டாள் தேநீரை தயாரித்து செல்வத்திற்கும் கலைவாணிக்கும் கொடுத்து விட்டு ஆயாசமாய் அமர்ந்தவளை அருமைக் கணவன் வடிவேலவின் குரல் எழுப்பியது. "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பதற்கிணங்க வீட்டினுள் மதுபான நெடியும், அகோரமான குரலுமே முதலில் நுழைந்தது. "டேய் செல்வம் அந்த கங்காணியும் மிச்ச காலமா சொல்லிகிட்டே இருக்கான். நாளக்கி ஒன்னைய கையோட கூட்டியார சொன்னான். நாளக்கி கொழும்பு டவுனுக்கு போக தயாரா இரு" என்றான் வடிவேல போ அப்பா நா இஸ்கூலுக்கு போகனும் அம்மாவும் என்னைய நல்லா படிக்க சொல்லி இருக்கு. நீ சொல்றத கேக்க மாட்டேன். என்ற செல்வத்திற்கு பளாரென்று கன்னத்தில் அறை விழுந்தது. தடுமாறி கீழே விழுந்தவனை நோக்கி "மொளச்சி மூனு எல விடல அதுக்குள்ள இவனுக்குள்ள திமிரு" இவன கொல்லாம விடக்கூடாது. என்றுக் கூறியவாறு அந்த இடத்தில் இருந்த மண்வெட்டி பொல்லைத் தூக்கி கொண்டு செல்வத்தை அடிக்க ஓடிவந்தான் வடிவேலு. அவனை ஓடி வந்து தடுத்த காமாட்சி "புள்ளைய ஒன்னும் செஞ்சுராதீங்க. நான்தான் ஒங்களுக்கும் சோறு போடுறேனே" என்றாள். இதைக் கேட்ட வடிவேலுவிற்கு கோபம் தலைக்கேறியது. "என்னய எதிர்த்து பேசுர அளவு தைரியம் வந்திருச்சாடி ஒனக்கு. ஒன்னைய என்ன செய்றேன் பாரு" என்று கூறியவாறு அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லால் அவளின் தலையில் ஓங்கி ஒருப் போடு போட்டான் "அம்மா" என்றவாறு கீழே சாய்ந்த காமாட்சியை செல்வம் ஓடி வந்துத் தாங்கிக் கொண்டான். அப்போதுதான் விபரீதத்தை உணர்ந்த வடிவேலு தலைத்தெறிக்க வெளியே ஓடினான்.

அன்று இரவு, காமாட்சி தலையில் கட்டுடன் படுத்திருந்தாள். அவளின் பக்கத்தில் அழுதழுது வீங்கிய கண்களுடன் செல்வமும், கலைவாணியும் அமர்ந்திருந்தார்கள். செல்வம் அழுகையினூடு சொன்னான். "அம்மா ஏதோ சாமி புண்ணியத்துல நீ தப்பிச்ச. ஒனக்கேதும் ஒண்ணுனா எங்களுக்கு யாரும்மா இருக்கா? நீ நல்லா இருந்தா அது போதும்மா எனக்கு படிப்பு தேவல. நாளையில இருந்து நா அப்பா சொன்ன எடத்துக்கு வேலக்கி போறேன் அம்மா. அப்ப நான், நீ,தங்கச்சி எல்லாருமே அப்பாகிட்ட அடி வாங்காம நிம்மதியாக இருக்கலாம் "என்றான் இதைக்கேட்ட காமாட்சியின் கண்களிரண்டும் குளமாகின. "ஏன் கண்ணுகளா ஒங்கள பெத்ததுக்கு ரொம்ப சந்தோஷப்படுகிறேன். செல்வம் கலைவாணியை நெனச்சாத்தான் கவலையா இருக்குப்பா. இந்தக் காயம் கூட வலிக்கல ஒங்க ரெண்டு பேருட்டு எதிர்காலத்த நெனச்சா மனசுக்கு ரொம்ப வலிக்குதுடா" என்ற காமாட்சி இருவரையும் அணைத்துக் கொண்டாள்.

காலைப் பொழுது அந்த மேட்டு லயம் காலைப் பொழுதிற்குரிய சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்தது. ஆண்களும், பெண்களும் அவசர அவசரமாக நமதுக் கடமைகளை முடித்துக் கொண்டு வேலைக்கு செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். சிலப் பெண்கள் தமது குழந்தைகளுக்கு துரித கதியில் உணவூட்டிவிட்டு பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் விட்டு விட்டு வந்தனர். தாயைப் பிரிந்த குழந்தைகளின் வீறிடல் அப்பிரதேசமெங்கும் எதிரொலித்தது.

தனது காயத்தின் வேதனையையும் பொருட்படுத்தாமல் சிரமத்துடன் காலையிலேயே எழுந்த காமாட்சி மிகுந்த சிரமத்துடன் காலை உணவை தயாரித்து விட்டாள். அதைச் செல்வத்திற்கும், கலைவாணிக்கும் பறிமாறி விட்டு, தனக்கும் சாப்பாடு கட்டி எடுத்துக் கொண்டு. ஆணியில் கிடந்த கூடையை எடுக்க கையை நீட்டியவளை செல்வத்தின் குரல் தடுத்து நிறுத்தியது. "இன்னயில் இருந்து அப்பா சொன்னமாறி நா வேலக்கி போறேன் அம்மா. நீ காயத்தோட வேலக்கி போய் கஷ்டப்பட வேணா. நீ பட்ட

கஷ்டம் போதும். நா இப்பவே போயி மாரிமுத்து கங்காணிய கட்டுண்டு வாரேன். அதுசரி அம்மா அப்பா எங்க நேத்து போனவரு தான், இன்னம் காணா" என்று கேட்டான் செல்வம். அப்போது வெளியில் காமாட்சி, காமாட்சி என்று யாரோ கூப்பிடும் ஓசைக் கேட்டது. செல்வம் ஓடி வந்து பார்த்தான் அங்கே பக்கத்து வீட்டு பார்வதியக்கா நின்று கொண்டிருந்தாள். செல்வத்தை பின் தொடர்ந்து வந்த காமாட்சி "என்னா பார்வதி காலங்காத்தால என்ன விஷயம். என்று வினவினாள். பார்வதியின் முகம் இருண்டிருந்தது. அது வந்து அதுவந்து என்று இழுத்தாள். காமாட்சியும் அவளின் பீடிகையை பார்த்து அச்சங் கொண்டவளாய் எதுவா இருந்தாலும் சீக்கிரம் சொல்லுடி நா வேலக்கி போகனும் என்றாள். அதுவந்து காமாட்சி,.... நேத்து தொங்க கடையில வித்தது வெஷ சாராயமாம் அதக் குடிச்ச இருவது பேரையும் ஆஸ்பத்திரில சேத்துட்டாங்க. நெறைய குடிச்ச ரெண்டு பேரு வருத்தம் கூடி செத்துடாக. அதுல நம்ம வடிவேலு அண்ணனும்..... என்று ஒருவாறு கூறி முடித்தாள் பார்வதி. இதைக்கேட்ட காமாட்சிக்கு தலைச்சுற்ற தொடங்கியது.

வடிவேலு மரணம் அடைந்து எட்டு நாள் பறந்தோடி விட்டது. மரண சடங்கில் கலந்து கொள்ள வந்த அனைவரும் காரியங்களை முடித்ததும் காமாட்சிக்கு ஆறுதலும் தேறுதலும் கூறியவாறு கலைந்துச் சென்றுவிட்டனர். தனித்து விடப்பட்ட தாயும், பிள்ளைகளும் மௌனமாய் அமர்ந்திருந்தனர். வடிவேலு அடித்தாலும், உதைத்தாலும் அந்தக் குடும்பத்திற்கு ஒரு வேலியாகவே இருந்தான். அதற்கு மேலாக செல்வமும், கலைவாணியும் தந்தை என்ற ரீதியிலும், காமாட்சி கணவன் என்ற ரீதியிலும் வடிவேலு மீது உளமார்ந்த அன்பைக் கொண்டிருந்தனர். இதனால் வடிவேலுவின் மறைவு அந்த அபலைக் குடும்பத்தை உளரீதியாகப் பாதித்தது.

"கடலில் சிந்தியவனுக்கு பற்றிக்கொள்ள ஒரு சிறுக் கொம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது போல"
காமாட்சிகு அந்தச்
சமயத்தில் ஒரு நிம்மதி
ஏற்படாமல் இல்லை. இனி
செல்வத்தை தொடர்ந்து
பள்ளிக்கு அனுப்பலாம்.
செல்வம் படிப்பில்
கெட்டிக்காரனாதலால்
எப்படியும் முன்னேறி
விடுவான் என்ற சிந்தனையே
அவளுக்கு பெரும்
ஆறுதலாய் இருந்தது.

அந்த அறையில்
நிலவிய நிசப்தத்தை
காமாட்சி தான் கலைத்தாள்
"டேய் செல்வம் இனி நீ
எதப்பத்தியும் கவலப்படாத
நாளைல இருந்து இஸ்கூல்
போயி படி. இனி ஒன்னய
தடுக்கவோ என்னய
அடிக்கவோ யாரும் இல்ல.
நீ படிச்சு முன்னேறி ஒந்
தங்கச்ச கரையேத்துறதுதான்
ஒன்னோட பொறுப்பு.
என்னய பத்தி கவலப்படாத"
என்றுக் கூறியவளை
செல்வம் கலங்கியக்
கண்களுடன் ஏறிட்டான்.
கணவன் இறந்தவுடன்
சமூகத்திலிருந்து ஒதுங்கி
விதவை என்ற தாழ்வு
மனப்பான்மையுடன் தனது
பிள்ளைகளையும் அடக்கி
வைக்கும் மலையக
கட்டுப்பெட்டித்தனத்திலிருந்து
சுதந்திரமாக வெளியேறி
மகனை எப்படியாவது
படிக்க வைக்க வேண்டும்
என்று பிடிவாதம் பிடிக்கும்
தனது தாய், செல்வத்தின்
கண்களிற்கு புதுமைப்
பெண்ணாகவே தெரிந்தாள்.
மலையகத்தில் வாழும்
ஒவ்வொரு தாயும் தனது
தாயை போல் சிந்தித்து
செயல்படத் தொடங்கினால்
மலையகம் எப்படி
இருக்கும்? என நினைத்த
செல்வத்திற்கு தனது தாயை
நினைத்தவுடன் மனதெல்லாம்
பூரித்தது.

நிமிடங்கள்
மணித்தியாலங்களாகி,
நாட்களாகி, மாதங்களாகி
இரண்டு வருடங்கள்
உருண்டோடி விட்டன.
காலைப்பொழுது,
தேயிலை இலைகளில்
பனி உருண்டோடி
கொண்டிருக்க, அதை
ஸ்பரிசித்த காமாட்சி தனது
குழந்தைகளின் கண்ணீரை
துடைப்பதாய் நினைத்துக்
கொண்டு கொழுந்துப்
பறித்துக் கொண்டிருந்தாள்.
இப்போது அவர்களின்
வாழ்வில் எவ்வித
பிரச்சினையும் இல்லை.
காமாட்சி நெற்றி வியர்வை
வழிந்தோட
பாடுபட்டாலும் அது
அவளுக்கு ஒருப்
பொருட்டாகவே
தெரிவதில்லை.
பொருளாதாரக் கஷ்டம்
ஏற்பட்டாலும் தனது
வாயை, வயிற்றை கட்டி
செல்வத்தை படிக்க
வைத்துக்
கொண்டிருந்தாள். கல்விப்
பொதுதராதரப் பத்திர
சாதாரணதர பரீட்சையை
எழுதிவிட்டு
பெறுபேறுகளை
அறிவதற்காக இன்று
பாடசாலைக்கு
சென்றிருந்தான் செல்வம்.

தூரத்தில் செல்வத்தின்
உருவம்
பனிப்படலத்திற்கிடையே
மங்கலாய் தெரிந்தது.
காமாட்சியின் அருகே
வந்து நின்றவனின் முகம்
முழு மதியைப் போலப்
பிரகாசித்துக்கொண்டிருந்தது.
"அம்மா நா
பாஸாயிட்டேன்.
பாடசாலையிலேயே நா
தான் நல்ல ரிசல்ட்"
என்றான். இதைக் கேட்ட
காமாட்சிக்கு வானத்தில்
பறப்பதை போல
இருந்தது. "என் ராசா. நா
பட்ட கஷ்டம் வீண்
போகலடா" என்று
அதற்கு மேல் வார்த்தை
வராமல் தவித்துக்
கொண்டிருந்தாள். "ஏய்
காமாட்சி அங்க என்னா
கத போயி வேளய பாரு,
காலங்காத்தால வேல
வெட்டியில்லாம
வந்துட்டானுக" என்று
மாரிமுத்து கங்காணியின்
குரல் இருவரையும்
உலுக்கியது. "நீ வீட்டுக்கு
போடா. ஒன்னய
டவுனுக்கு வேலக்கி
அனுப்ப முடியல தானே.
அதுதான் பாய்றான்"
என்று வேலையை தொடர
சென்றுவிட்டாள் காமாட்சி.

வீட்டுக்கு திரும்பிய
செல்வம் தங்கையுடனும்
தனது மகிழ்ச்சியைப்
பகிர்ந்துக் கொண்டான்.
அவளின் மகிழ்ச்சிக்கு
அளவேயில்லை. தனது
காலிரண்டும் குணமாய்ப்
போனதைப் போல
மகிழ்ச்சியுடன்
காணப்பட்டாள்.
செல்வத்திற்கு அடுத்த
கட்டமாய் என்ன
செய்வதென்று
தோன்றவில்லை. அந்தத்
தோட்டத்தில் அவனுக்கு
தெரிந்து, படித்தவர்களும்
யாருமில்லை. எனவே
தானே தன்னிச்சையாய்
உயர்தரத்தில் விஞ்ஞானப்
பிரிவில் கல்வியைத்
தொடர முடிவு செய்தான்.
சிறுவயதிலிருந்தே இதே
தோட்டத்திற்கு
வைத்தியராய் வந்து,
இங்கு வாழும் அபலை
மக்களுக்கு சேவை செய்ய
வேண்டுமென்ற ஆசை
செல்வத்திற்கு. அந்த
ஆசை நிறைவேற
வேண்டுமென மரத்தடி
பிள்ளையாருக்கு சிதறு
காய் அடித்துப் பிரார்த்தனை
செய்துக் கொண்டான்.

பக்கத்து நகரத்தில்
இருந்த கல்லூரியில் தனதுக்
கல்வியை தொடர்ந்தான்
செல்வம். அங்கு முதலில்
தோட்டத்துப் பையன் என
இளக்காரமாய்
நோய்கியவர்களை தனது
கல்வித் திறமையாலும்,
விளையாட்டுத் திறமையாலும்
தேயிலைத் தோட்டத்தில் கூட
இப்படிப்பட்ட
திறமைசாலிகள்
இருக்கின்றார்களா? எனக்
கேள்விக்குறியோடு பார்க்க
வைத்தவன் செல்வம்.
வசதியும், வாய்ப்பும்
இல்லாமையினால் தான்
நிறையப்பேர்

இலைமறைகாயாய் இருந்து,
தேயிலைக்கே உரமாகி
மண்ணோடு மண்ணாகி
போகின்றார்கள் என்ற
உண்மையை செல்வத்தின்
மூலம் நிறையப்பேர்
தெரிந்துக் கொண்டனர்.
செல்வம் எல்லாத்
துறைகளின் மூலமும்
அக்கல்லூரிக்கு புகழ்
சேர்த்துக்கொண்டிருந்தான்.

நாட்களுக்கு சிறகு
முளைத்ததோ என்று
எண்ணும் படியாக நாட்கள்
வெகுவேகமாக பறந்துச்
செல்ல இரண்டு வருடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைந்து விட்டன. அன்று உயர்தரப் பரீட்சையின் பெறுப்பேறுகள் வெளியாகும் நாள். எதிர்பார்த்தது போலவே செல்வம் அந்த மாகாணத்திலேயே விஞ்ஞானப்பிரிவில் அதிகூடியப் புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு முதல் மாணவனாய் தெரிவாகி இருந்தான். ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் பாராட்டு மழையில் நனைந்துக் கொண்டிருந்தவனுக்கு அம்மாவிடம் சென்று பெறுபேறுகளை செல்லி அவளை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்த வேண்டும். தங்கையை சந்தோஷ ஏணியின் உச்சியில் ஏற்ற வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. ஒருவாறு விடுபட்டு வீடு சேர்ந்தான். அன்று மூவரும் சிறகுகள் பூட்டியது போல உணர்ந்தனர். மூவரும் சேர்ந்து செல்வம் பல்கலைக்கழகம் செல்ல ஆயத்தம் செய்யத் தொடங்கினர்.

காலம் கடிகார முட்களில் காணாமல் போக உயர்கல்வியை முடித்துக்கொண்டு வெளியேறினான் செல்வம். இல்லை, இல்லை இப்போது அவர் டொக்டர் செல்வம். அவர் தனது ஊருக்கு வெகுவேகமாய் விரைந்துக் கொண்டிருந்தார். கடந்த இரண்டு மாதமாய் விட்டிற்கு கடிதம் அனுப்பியும் எவ்வித பதிலும் இல்லை. பரீட்சை காரணமாக செல்வத்திற்கு வீட்டிற்கு வருவதற்கான வய்ப்பும் இருக்கவில்லை. எனவே அவர் தனது தாயையும், தங்கையையும் காண விரைந்தார்.

பொன்னிமலைத் தோட்டத்தில் தனது வீட்டை நோக்கியவர் திடுக்குற்றார். அப்படியே செயலற்று நின்றவரை வேலு தாத்தா அடையாளம் தெரிந்து கொண்டார். "ஆரு செல்வம் தம்பியா? பாரு தம்பி நெலமய போன மாசம் சரியான கொழப்பம். இங்க இருந்த ஒங்க கூட்டாளி ரமேசுக்கும், பக்கத்து தோட்ட பொடியன்களுக்கும் தகராறு. அதுனால ராவோட ராவா வந்து இந்த மேட்டு லயத்துக்கே தீ வச்சிட்டானுக பாவிப் பயலுக. அதுல ஒங்கம்மாவும், தங்கச்சும்" என்று மேல கூற முடியாமல் ஓவென்று அழத்தொடங்கினார் வேலு தாத்தா.

"காமாட்சி இல்லாம்" என்றப் பெயருடன் அந்தக் கட்டிடம் கம்பீரமாய் வீற்றிருக்கிறது. அங்கு செல்வத்தின் உதவியுடன் படிக்க வசதியில்லாத அநாதைச் சிறுவர்களுக்கு முற்றிலும் இலவசமாகக் கல்வி வழங்கப்படுகிறது. அதை முழு மன நிறைவோடு செல்வம் செய்து வருகிறார். இனி அந்த பொன்னிமலைத்தோட்டம் எத்தனையோ வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வக்கீல்களை உருவாக்கும். மலையக அன்னை அந்த விடிவுக்காலத்தை எதிர்நோக்கி காத்திருக்கிறாள்.

செல்வம் தனது தாய் தன்னை மனப்பூர்வமாக ஆசீர்வதிப்பதாய் உணர்கிறார்.

பிரியங்கா

தெமோதர தோட்டம்
தெமோதர

முகம் கொள்ளும் மலையகம்

இயற்கை அன்னையின் படைப்பில்
உயர்ந்து நிற்கும் மலைத்தொடர்
அவற்றினிடையே விரைந்தோடி வரும்
கண்கவர் நீரருவிகள்
வானுயர் மரங்கள் பலவித மலர்கள்
மரகதக் கம்பளமென பசும் புற்தரை
இவற்றினூடாக இன்னிசை தென்றல்
இதமான சுகம் பல இருந்தும்
நிலை தெரியாது தடுமாறும் மலையக மக்களின்
மனப் போராட்டங்கள் தொடர்கின்றன.
இறைவனின் படைப்பில் ஏற்றத்
தாழ்வுகள் இல்லாவிடினும்
புல்லுரவிகள் சிலர் எம்மிடையே
இவற்றை படைத்துவிட்டனர்
மனிதனுக்கு மனிதன் சரிநிகர் என
உணரும் காலம் வரை
மலையகத்தார் பிரச்சினைக்கு
விமோசனமே கிடையாது.
நாட்கள் நகர்கின்ற - அதை
காலங்கள் கடக்கின்றன.
எங்கள் கனவுகளை நனவாக்க
ஒரு பார்தி சுடர்விடக் கூடாதா!
விடிவை தேடி பலகுரல்கள்
இருளை போக்க ஒருகுரல்
என்ன போராட்டமோ!
என்ன நிலைமாற்றமோ!
பூக்கள் பல மலர்ந்தாலும்
ஆனைத்தும் மணம் பரப்புவதில்லை!
தரல்கள் பல ஒலித்தாலும் - அவை
சிலருக்கு கேட்பதில்லை.
வேலைக்கேற்ற வேதனமுமில்லை
சோத்து சுகம் எம்மைத் தேடி வரப் போவதில்லை....

தோட்டகாட்டான் என்ற
நாமம் வேரூன்றிய நிலையில்
தோல்லைகள் பல சுமக்கும்
சுமைதாங்கிகளாக தொழிலாளர் நாம் ....
ஏற்றம் என்பது எமக்கு ஏற்படாதவரை
விடியலை காணாத எரிநட்சத்திரங்களாய்
ஏங்கிக் கொண்டுள்ளோம்:
வீடின்றி சிலர் வாட
வீதியின்றி பலர் வாட
அன்னகாவடிகளாய் தவிக்கும்
மலையகத்தாருக்கு போக்கிடம்
கிடைப்பதெப்போது!

வாழ்க்கையை வென்றெடுக்க
வாள் தேவையில்லை!
நிஜத்தை வென்றெடுக்க
பணம் தேவையில்லை!
என்ற காலம் மலையேறிவிட்டது!
போராட்டமின்றி
வெற்றி என்பதில்லை!
போராடியே ஜெயம் பெறுவோம்
இனியும் நாம் அடிமைகளல்ல!
நாமும் சுதந்திர இலங்கையின் பிரஜைகள்!

- வீதுஷா -
மோபிறே கல்லூரி
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

ELITE TEXTILES

(Dealers in Textiles)

No : 60, , 3rd Cross Street,
Colombo - 11
Tel : 323080

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

SEYA PRINT & PRINTS

(Graphic Designing, Type setting & All kinds of printing)

No: 14/95, Dr.Dainster De Silva Mawatha,
Colombo - 08
Tel : 676917

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

LATHA JEWELLERY

No: 19, Main Street,
Hatton.
Tel : 051-22685

With Best Compliments from :

THARANI TRADERS & PAWN BROKERS

No: 13/8, Park Wood Complex,
Park Road,
Nuwara Eliya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்குள் பெய்த மழை

ஓ..! மானுடமே...
இடி மழை
இயற்கையில் பெய்யவில்லை
எங்கள்...
இதயத்தில் தான் பெய்கின்றது
பூகம்பம் - இந்த
புவியில் சிதரவில்லை
எங்கள்...
புலம்பலில் தான்
அதிர்கின்றது

ஆம்....
தென்னக மண்ணில்
தோன்றிய குலம்
இலங்கை தேசத்து
தறிஞ்சி மண்ணில்
தமுறுகின்றதடா...!

ஆங்கில தேசத்தின்
ஆட்சியில்
அடிமையான மனிதம்
எருமையைப் போல்
இழுத்து வந்து
இலங்கை நாட்டில்
இறக்குமதியாயிருக்குதடா...!

உலகம் தெரியாத
உழவர்குலத்தை
தேங்காய், மாசி,
தேயிலை தூரில் என
ஏவி விட...
தேடி வந்தோமே...
தேரி மலைக்குள்ளேயடா!

வரலாற்றால் வஞ்சிக்கப்பட்டும்..
காலத்தால் கசக்கப்பட்டும்...
அடிமையாய் ஆழப்பட்டும்...
நிம்மதி தேடி வந்தோம் - எங்கள்
நிழல் கூட
நிர்க்கதியாக்கி விட்டதுவே யடா:

காடாய்.. மேடாய்..
கல்லாய்... கிடந்த
தன்று மண்ணை
துலை நிமிர்ந்து கேட்டால் - எம்
துலை விதியை கூறி
தூனும் அழுத்திடுமேயடா!

கொத்தடிமையாய்
கொண்டு வந்து
சொத்து பணமெல்லாம்
சொரண்க் கொண்டு
பித்து பிடித்து போக
பிடிங்கி போனானடா!
அன்னிய தேசத்து
அரக்கனடா:

கால நேரம் தெரியாது
கஷ்ட துன்ப சுமையோடு:
ஆடி மழை சீரலிலும்:
சித்திரை வெயில் கணலிலும்:
செத்துப் போக...
சத்தி இழக்க
உடல் இளைக்க
உழைத்தோமடா:

கூலி வேலை என்று
தோலில் கூடை சுந்தும்
ஒல்லியாக உரைந்து போக
ஓடி ஓடி பரித்தோமேயடா...
அள்ளிக் கொடுப்பான் - என்று
நினைத்து....!
தேரி ஏரி ஏரி.. பரித்தோமேயடா
கிள்ளி விட்டானேயடா:
கீழே தள்ளிவிட்டானேயடா!

எட்டடி வீட்டில்
எம்மை அடைத்து!
நாலடிக் அப்பாலே
எம்மை நடக்க விட்டு!
ஆறடி நிலம் கூட
சொந்தமில்லையென
அந்தரத்தில், ஆக்கிவிட்டானேயடா!

குரங்கு என்ற பயத்தில்
பதுக்கியும்!
குதிரை என்று இலயத்தில்
அடைத்தும்
தின்றுவிட்டானேயடா - வாழ்வை
பிடுங்கி விட்டானேயடா!

கம்பளி துணியை
போர்வைப் போட்டும்!
கடுமழைக் காலம்
கஷ்ட துயர் ஏற்றும்
கரைந்தோமேயடா!
கண்ணீர் வடித்தோமேயடா!

கூடை சுமந்தும்
கொழுந்து பறித்தும்
வீட்டை மறந்து
பொழுதை கழித்து
மலை மேட்டுக்குள்ளே
மடிந்தோமடா!

கரங்கள் எல்லாம்
கடு கடுத்து போக!
கல்லும் முள்ளும்
கால்கள் குத்த!
பரந்த காட்டை
பசுமையாக்கியும்
நிம்மதியில்லையடா!

பட்டாடை கனவோடும்!
படங்காடை நிஜமோடும்!
கொட்டாத மழைதன்னில்...
ஏறாத தேரி ஏரியும்
ஏரிபணிகுளிருள்ளும்
சாவாதகுறையாக
சளிப்போடு வாழ்ந்தோமேயடா!

பாயோடும் நோயோடும்
படுக்கையில் கிடந்தாலும்
நாள் ஒன்றும் தவறாமல்
நடு நடுங்க உழைத்தோமே.
நாடி நரம்பெல்லாம்
கொதித்திடவே!

பட்டினியாய்
பசி பொரத்தும்
பஞ்ச கஷ்டத்தில்
பரிதவித்தும்
துன்பத்தை
தோழ் தூக்கிடவே
துனிவோடு உழைத்தோமேயடா!

உருகி உருகி
ஓடாய் தேய்ந்தும்!
உடல் சோர்வில்
உள்ளம் வாடியும்!
எதுவித உதவியின்றியே!
எங்கி தவிக்கின்றோம்
மலைக்குள்ளே இன்றடா!

கலங்கிய கண்ணில்
கண்ணீர் நிறைந்தும்!
சுகமெல்லாம் சுத்தமாய்
இதயம் மறந்தும்
மனபுக்குள்ளே மதிமயங்கி
மழைப் பெய்கின்றோம்
மலைக்குள்ளே கண்ணீரடா!

- செல்வராஜ் -
அனேஸ்லீ என்றசிலியன்
ஆட்லோ தோட்டம்
அக்கரபத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நன்றிகள்

புதிய பண்பாட்டு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த மலையக கல்வி ஆய்வரங்கத்திற்கும் நாடோடிகள் சஞ்சிகை வெளியீட்டிற்கும் சகல வழிகளிலும் உதவிகளை நல்கிய அனைவருக்கும் நன்றிகளை கூற கடமைப்பட்டுள்ளோம்.

ஊடக அனுசரணை வழங்கிய சூரியன் எப்.எம். நிர்வாகத்தினருக்கும். முதல் நாள் நிகழ்வுகளுக்காக மண்டபம் வழங்கி உதவிய தொண்டமான் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் நிர்வாகத்தினருக்கும். இரண்டாம்நாள் நிகழ்வுகளுக்காக மண்டபம் வழங்கிய மாணிக்கப்பிள்ளையார் (இந்து மகா சபை) ஆலய நிர்வாகத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிதியுதவிகளை வழங்கிய திரு.பி.இராதாகிருஷ்ணன் (பாராளுமன்ற உறுப்பினர்) Global Visions நிறுவனத்தின் உரிமையாளர், திரு.என்.செல்வராஜா (onega Traders, 62A gioa Old moor Street Col - 12) திரு.சிவராமன் (9A அமரசேகர மாவத்தை, கொழும்பு —05), திரு.எஸ்.ராம்குமார் (101, பதுளை வீதி, பசறை) திரு.சுந்தரம் பழனியாண்டி, (151இ பழைய சோனகத் தெரு, கொழும்பு — 12), திரு.கணேஷன் (City Point Col -11) திரு.ஜெயரட்ணராஜா (Hero Electronics 88-2/4, 1st Cross Street, Col -11), சமூக அபிவிருத்தி நிலையம், கண்டி, திரு.எல்.ஜோதிகுமார் (சட்டத்தரணி, ஹட்டன்), திரு.பி.ராஜதுரை (சட்டத்தரணி, நுவரெலியா), திரு.தினகரன் (மகாகுடுகல, அல்கரன் ஓயா), பதுளை மாவட்ட ஆசிரியர்கள், திரு.மகேஸ்வரன் (சர்மிளா ஜுவலரி, 305, செட்டியார் தெரு, கொழும்பு — 11), திரு. ராஜேந்திரன் (ஆவெலியா, நுவரெலியா), திரு.ஆர்.அஜித்குமார் (296/1, மாம்பே வடக்கு பிலியந்தல), திரு.கிருபா (லிங்கன் பதிப்பகம், ஹட்டன்) ஆகியோருக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சஞ்சிகைக்கு விளம்பரம் மூலம் அனுசரணை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். மற்றும் சகல வழிகளிலும் சகலவிதமான ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புதிய பண்பாட்டு அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக அனுசரணை :

இலங்கையின் முதல்தர
வானொலி

சூரியன்
FM

கொழும்பு 103.2 FM
கண்டி 97.3 FM
நாடு முழுவதும் 97.9 FM இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Beginning of a new era...

GLOBAL VISIONS

- PRODUCERS OF TELE-FILMS, DOCUMENTARIES & FILMS
VIDEO FILMING, EDITING, AUDIO COMPOSING,
ALL MEDIA ADVERTISING,
GRAPHICS DESIGNING, PRINTING & PUBLISHING,

No 48/5, St.Marys Road,
Colombo -15, Sri Lanka.
Tel :433936, 332955, 524031
Fax : 445659
E-Mail : gvisions@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org